கவினார்ந்த கலைச்சொற்கள்

தமிழ்த்தொண்டர்
கோ.முத்துப்பிள்ளை

Adamant - ஓட்டாரம்
Common Law - எழுதாச் சட்டம்
Ophthalmic - கன்னியல்பகுதி
Do's and Dont's - செய்வன தவிர்வன
Maiden Attempt - கன்னி முயற்சி
Paper weight - காகிதக் காப்பு
Agenda - கருதுபொருள் பட்டியல்
Counselling - கலந்து ஆலோசனை
Case-Sheet - நோயாளர் குறிப்பேடு
Trunk Box - சேமப்பேழை
Conservative - பழமை விரும்பி
Clinic - மருத்துவக்கூடம்
Transformer - மின் அளவு மாற்றி
Dietician - உணவு வகைப்படுத்துநர்
Omission - செய்தக்க செய்யாமை
Bonus - மகிழ்வூதியம்
Allergy - ஒவ்வாமை
E-Mail - மின்னணு அஞ்சல்
Transaction - செயல்வினை

கவினார்ந்த
கலைச்சொற்கள்

ஆசிரியர்:

தமிழ்த் தொண்டர் **கோ. முத்துப்பிள்ளை**

தமிழ்நாட்டரசின் கி.ஆ.பெ. விருது பெற்றவர்

வர்த்தமானன் பதிப்பகம்

15. சரோஜினி தெரு,

சென்னை - 600 017.

தொலைபேசி : 4350561

முதல் பதிப்பு : அக்டோபர் 2001

பதிப்புரிமை பெற்றது

விலை : ரூ.25-00

ஒளிஅச்சுக்கோப்பு : எல்.கே.எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
சென்னை - 17. ✆ : 4361141
ஆப்செட் அச்சு : மதராஸ் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-5. ☎ : 8546933

நூன்முகம்

நான் 11-2-1942ஆம் தேதியன்று அரசு தலைமைச் செயலகப் பணியில் ஒரு சிறிய பதவியில் சேர்ந்தேன். படிப்படியாக உயர்ந்து 1-10-1974 ஆம் தேதியன்று அரசு இணைச் செயலாளராக ஓய்வு பெற்றேன். இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழன்னையின் தண்ணருளால் எனக்குப் பல அரிய வாய்ப்புகள் கிடைத்தன. என்னை இந்த நீண்ட, நெடுங்காலத்தில் ஊக்கப் படுத்திய அனைவரையும் நான் இப்போது எண்ணிப் பார்க்கின்றேன்.

முதற்கண், அரசு தலைமைச் செயலக நண்பர்களை நான் குறிப்பிட வேண்டும். தொடக்க காலத்தில், அருமை நண்பர் எம்.கே. அருமைநாதன் அவர்கள் "Floodlight Dinner" என்பதற்குத் தமிழ் என்ன என்று கேட்டார். நான் “பொங்கு பேரொளி விருந்து” என்று விடை கூறினேன். அவர் அதைப் பெரிதும் பாராட்டினார். இத்தகைய எண்ணற்ற நிகழ்ச்சிகள் என்னை மொழிபெயர்ப்புப் பணியில் வேகமாக ஈடுபடச் செய்தன. தலைமைச் செயலகப் பணியாளர் மன்றத் தலைவராக நான் இயங்கியபோது, சிறப்புமிக்க தமிழ் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

தலைமைச் செயலகப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது என்னைப் பெரிதும் கவர்ந்தவர் ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்கள் ஆவார். அவருடைய ஆட்சிமொழி நூல்களைப் பயின்று நான் பெரிதும் பயன் பெற்றேன். இதே போன்று எனக்குப் பேருதவி புரிந்த பெருமகனார், தமிழ் நாட்டரசின் ஆய்ந்துரைஞராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள வே. கார்த்திகேயன் இ.ஆ.ப. அவர்கள் ஆவார். தமிழ் வளர்ச்சிக்கெனத் தனியாக ஒரு துறை தொடங்கப் பெற்றபோது அந்தத்துறையின் அரசு உதவிச் செயலாள ராக என்னைத் தேர்ந்தெடுத்தவர் இவரேயாவார். பிற்காலத்தில், ஆட்சிமொழி ஆணையம், நீதியரசர் எஸ். மகராசன் அவர்கள் தலைமையில் திருத்தி அமைக்கப் பெற்றபோது, அதில் என்னையும் ஓர் உறுப்பினராகச் சேர்க்குமாறு உத்தரவிட்டவரும் இவரேயாவார்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற மூன்று உலகத் தமிழ் மாநாடுகளிலும் ஆட்சிமொழி ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கும் வாய்ப்பினை நான் பெற்றேன். என்னை இதற்குத் தேர்ந்தெடுத்த நீதியரசர் எஸ். மகராசன் அவர் களை நான் என்றும் மறக்க இயலாது.

நான் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பே, சென்னை வானொலி நிலையத்தார் எனக்குப் பல அரிய வாய்ப்புகளை வழங்கி வந்தனர். அண்மைக் காலத்தில், தமிழ் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தபோது, என்னை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டனர் என்றுதான் சொல்லவேண்டும். “நாளொன்று பிறக்க -

சொல்லொன்று அறிவோம்” என்னும் நிகழ்ச்சியிலும், “தமிழறிவோம்” என்னும் நிகழ்ச்சியிலும் அரிய வாய்ப்பு களை வழங்கிச் சிறப்பித்த அருமை நண்பர், நிகழ்ச்சிப் பொறுப்பாளர், சொற்றமிழ்வித்தகர் முனைவர் சுந்தரம் ஆவுடையப்பன் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டு மென்று நான் வாழ்த்துகிறேன். இதே போன்று “கவினார்ந்த கலைச் சொற்கள்” என்னும் தலைப்பில் என்னுடைய கட்டுரைகளைத் தம்முடைய “மூவேந்தர் முரசு” என்னும் சீரிய இதழில் வெளியிட்டுப் பேருதவி புரிந்து வருகிற இலக்கியச்சுடர் மூவேந்தர் முத்து அவர் களும் என் நன்றிக்கு உரியவராவார்.

ஆட்சிமொழித் துறையில், எந்த ஆங்கிலச் சொல்லை யாவது மொழிபெயர்க்க முடியாது என்று யாரேனும் கூறிவிட்டால், அதனை ஓர் அறை கூவலாக நான் ஏற்றுக்கொள்வேன். கடந்த, ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாகச் செதுக்கிச் செதுக்கி நான் செய்துள்ள சிறந்த மொழி பெயர்ப்புகள் எண்ணற்றவை என்று அடக்கத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவை, என்னுடைய முத்திரை பதிக்கப் பெற்ற தனிச்சிறப்பு மிக்க சொற்களாகும்.

இன்றுகூட, சென்னை மாக்கவி பாரதி நகரில் இயங்கி வருகின்ற முத்தமிழ் ஆய்வு மன்றத்தில், அறிஞர் பெருமக்களின் உதவியோடு, ஆட்சிமொழிச் சொல் லாக்கப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றேன். இந்தப் பணியை வி.ஜி.பி. நிறுவனத்தார் மிகவும் ஊக்கி வருகின்றனர்.

இந்நூலினை வெளியிடும் சென்னை வர்த்த மானன் பதிப்பக உரிமையாளர் பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் அவர்களுக்கு என் நன்றி என்றும் உரித்தாகும்.

இந்நூலினை உருவாக்குவதில் எனக்குப் பேருதவி புரிந்துள்ள பல்கலைச் செல்வர், பேராசிரியர் பா. மாணிக்கவேலு அவர்களை நான் போற்றி மகிழ்கின்றேன்.

என்னுடைய சொல்லாக்கங்களை எத்தனையோ தனிப்பட்ட அறிஞர்களும், தமிழ் மன்றங்களும் தவறா மல் பாராட்டி வருகின்றன. இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போன்று, அண்மையில், தமிழ் நாட்டரசு எனக்கு கி.ஆ.பெ. விசுவ நாதம் விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. இதனால் என்னுடைய பிறவிப் பெரும்பயனை நான் பெற்று விட்டதாக எண்ணிப் பேருவகை கொள்கின்றேன். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என்று கூறி இதனை நிறைவு செய்கின்றேன்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து."

குறள்:596

கோ. முத்துப்பிள்ளை
24. ஆறாம் குறுக்குச் சாலை
மாகவி பாரதி நகர்
சென்னை. 600039

A to Z – அகர முதல் னகர இறுவாய்

A to Z என்பதைத் தமிழில் சொல்ல வேண்டுமானால் "அ" முதல் "ன" வரையில் என்று சொல்ல வேண்டும். ஆனால் இது அழகுற அமையவில்லை. இந்தச் சிக்கலைத் "தொல்காப்பியம்" இனிதாகத் தீர்த்து வைக்கின்றது. தொல்காப்பிய நூற்பாவை இப்போது பார்ப்போம்.

"எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே"

"அகர முதல் னகர இறுவாய்" என்னும் ஓசையின்பம் பயக்கும் இந்தத் தொடரை நாமும் பயன்படுத்தி மகிழலாமே.

Absentee Land lord- செல்லா நிலக்கிழார்

Absentee Land lord என்னும் சொல்லிலேயே சொத்து வைத்திருப்பவர்கள் செய்யும் தவறு தெற்றென விளங்கும். நிலத்திற்கு உரியவர் அடிக்கடி நேரில் சென்று நிலத்தைப் பார்த்து வரவேண்டும். அவ்வாறு பார்த்து வரத் தவறினால், அவர் Absentee Land lord ஆகி விடுகிறார். அத்தகைய சூழ்நிலையில் நிலமங்கை சினமடைவாளாம்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடிவிடும்"

Absentee land lord என்பவர் வேறு யாருமில்லை! அவர்தாம் "செல்லா நிலக்கிழார்"! காலப் போக்கில், அவர் செல்லாத நிலக்கிழாரராகவும் மாறிவிடக்கூடும்.

Accident- அதிரிடர்

Accident என்னும் சொல்லை "விபத்து" என்று மொழி பெயர்க்கின்றோம். ஈண்டு வள்ளுவர் வழங்கிய குறட்பா ஒன்றினை நினைவு கூர்வோம்.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
அதிர வருவதோர் நோய்"

அதிரவரும் இடர்தானே விபத்து. எனவே Accident என்னும் ஆங்கிலச் சொல்லை அழகு தமிழில் "அதிரிடர்" என்று கூறி அகமகிழ்வு கொள்ளலாமல்லவா?

Act-செய் சட்டம்

"சட்டம்" என்னும் சொல், எல்லா வகைச் சட்டங்களுக்கும் பொதுவாகப் பொருந்துகின்ற ஒரு சொல்லாகும். சட்டமியற்றும் அதிகார முடைய சட்டப் பேரவையாலோ, நாடாளு மன்றத்தாலோ நிறைவேற்றப் பெற்றுவிட்ட நிலையில் "சட்டம்" சிறப்புப் பெறுகின்றது. "சட்ட திட்டங்கள்" என்னும் பேச்சு வழக்கு, இக்கருத் திற்குப் பொலிவூட்டுகின்றது. செய்யப் பெற்று

நடைமுறைக்கு வருகின்ற Act என்பதற்கு ஈடாக "செய் சட்டம்" என்று செப்பி மகிழலாமே!

Adamant- ஒட்டாரம்

Adamant என்று சொன்னவுடனேயே "பிடிவாதம்" என்று பேசி விடுவோம். பிடிவாதம் நமக்கு நன்கு தெரிந்த சொல்; செயலும் கூட! ஆயினும் பேச்சுவழக்கில் இன்னொரு சுவையான சொல் புழங்கி வருகிறது. அதுதான் "ஒட்டாரம்" என்னும் உயர்ந்த சொல். இதைக் கேட்டதில்லையே என்று யாரும் சொல்லிவிட முடியாது. ஏனென்றால், குழந்தைச் செல்வங்கள் இந்தச் சொல்லை எந்நேரமும் நினைவுப் படுத்திக் கொண்டிருப்பார்கள்! "ஒட்டாரம்" என்னும் சொல்லையும் நாம் உலவவிடலாமே!

Advantage-ஆபயன்

Advantage என்பதற்கு "அனுகூலம்" என்று பொருள் கூறுகின்றோம். இதற்கு நல்ல தமிழில் ஒருமொழி பெயர்ப்புக் கிடைக்குமா என்று பார்த்தால், கட்டாயம் கிடைக்கத்தான் செய்யும்.

> "ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
> காவலன் காவான் எனின்"

"ஆ பயன்" என்பது வேற்றுமைத் தொகையாக ஈண்டு இடம் பெற்றுள்ளது. ஆகிய பயன், ஆகிக் கொண்டிருக்கும் பயன், ஆகப் போகும் பயன். இதற்குரிய வேறு பெயர்தான் Advantage.

"ஆய பயன்" என்றும் பிறிதோரிடத்தில் விளக்கிக் கூறுகின்றார் வள்ளுவர். முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் அவரே உரியவரன்றோ?

Adviser – ஆய்ந்துரைஞர்

பெரிய நிறுவனங்களும் பெரிய பதவியில் இருப்பவர்களும், ஒரு துறையில் வல்லுநராக இருக்கும் ஒருவரைத் தங்களுக்கு Adviser ஆக அமர்த்திக் கொள்ளும் வழக்கம் இருந்து வருகின்றது. எடுத்துக் கொண்ட எந்தப் பொருளையும் நன்கு ஆராய்ந்து செய்திகளைச் செம்மைப் படுத்தி, அறிவுரை வழங்குகின்றார், இந்த Adviser. ஆராய்ந்து பார்த்து அறிவுரை வழங்குகின்ற காரணத்தால், இவரை "ஆய்ந் துரைஞர்" என்று அழகுறக் கூறலாமே. Adviser to the Governor என்று வருமிடத்து, அதனை "ஆளுநரின் ஆய்ந்துரைஞர்" என்று அருமைப் படுத்தலாம் அல்லவா?

Aerial - ஈர்ப்புக்கம்பி

ஒலி அலைகளை ஏற்று, அவற்றை வானொலிப் பெட்டிக்குள் அனுப்பி வைக்கின்ற கம்பியை Aerial என்று ஆங்கிலத்தில் அழைக் கின்றோம். ஒலி அலைகளை ஈர்க்கும் கம்பியாக, இஃது அமைந்திருப்பதால், இதனை "ஈர்ப்புக் கம்பி" என்று இனிய தமிழில் இயம்பலாமல்லவா?

Agenda - கருது பொருள் பட்டியல்

நடைபெறவுள்ள ஒரு குழுக்கூட்டத்தில் கருதப்பட வேண்டிய பொருள்களின் பட்டியலை Agenda என்னும் ஆங்கிலச் சொல்லால் குறிக்கின்றோம். Programme என்னும் சொல்லை "நிகழ்ச்சி நிரல்" என்று நாம் ஏற்கெனவே மொழி பெயர்த்துள்ளோம். எனவே Agenda என்பதை "நிகழ்ச்சிப் பட்டியல்" என்று சொல்லக்கூடும். ஆயினும், பொருள் நன்கு புரியும்படியாகக் "கருது பொருள் பட்டியல்" என்று கனிவுறக் கூறலாமே.

Agreeable Diet- பொருந்தும் உணவு

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு"

என்று வள்ளுவப் பெருந்தகை வழிகாட்டு கின்றார். மாறுபாடு இல்லாத உணவை,அளவு மிகாமல் உண்டால், நோய் ஏற்படுவதற்கான காரணம் இல்லாமற் போகும். "மாறுபாடு இல்லாத உண்டியே" Agreeable Diet ஆகும். இன்னொரு கருத்தும் இங்கே குறிக்கத்தக்கது. மறைமலையடிகளார், "பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்" என்னும் அருமையான ஆய்வுக் கட்டுரை ஒன்றை வரைந்துள்ளார். "பொருந்தும் உணவுதானே" Agreeable Diet. மாறுபாடில்லாத உண்டியைப் "பொருந்தும் உணவு" என்று பொறிக்கலாமல்லவா?

Aircondition - வளிச்சீர்மை

காற்றுப் பதனம் என்பது இதற்குரிய விளக்கமாகும். வெப்ப நாடுகளில் குளிர்ச்சியை விரும்புவார்கள். குளிர் நாடுகளில் வெப்பத்தை விரும்புவார்கள். எனவே, சூழ்நிலைக்கேற்ப காற்றினைக் குளிர்ச்சியாக்குவதும், வெப்பமாக்கு வதும் தேவைப்படுகின்றன. காற்றினைச் சீர்மைப் படுத்தும் முறையாக இது இருப்பதால், Air condition என்பதற்கு "வளிச்சீர்மை" என்னும் வாகான பெயரை வைத்துக் கொள்ளலாம் அல்லவா? A/c என்று வரும் போது வ/சீ என்று அமைத்துக் கொள்ளலாமே!

Alarm Time-Piece - எழுப்பு மணிப்பொறி

Time-Piece என்பதை மேசைக் கடிகாரம் என்று மொழி பெயர்க்கின்றோம். Alarm Time - Piece என்னும் கடிகாரம் அல்லது மணிப் பொறி, குறிப்பிட்ட ஒரு பணியைச் செய்கின்றது. காலையில் நாம் விரைந்து எழ வேண்டிய நேரங்களில் இந்தக் கடிகாரம் ஒலியை எழுப்பி நம்மைத் துயில் நீங்கச் செய்கின்றது. எனவே இதனை "எழுப்பு மணிப்பொறி" என்று இயம்பி மகிழலாமல்லவா!

Album - படத்தொகுப்பம்

ஒளிப்படங்களை, அதற்கென்று அமைக்கப் பெற்றுள்ள ஒரு புத்தகத்தில் ஒட்டி

வைக்கின்றோம். படங்களை ஓரிடத்தில் பாது காத்து வைப்பதற்கு இந்தப் புத்தகம் உதவுகின்றது. ஒளிப்படங்கள் ஒரு தொகுப்பாக வைக்கப் பெற்றுள்ள இந்தப் புத்தகத்திற்குப் "படத் தொகுப்பம்" என்னும் பெயரினைப் பெய்து மகிழலாமே!

Allergy - ஒவ்வாமை

பொருந்தா உணவு, பொருந்தா மருந்து, தூய்மையற்ற காற்று முதலானவற்றை உட்கொள் வதன் மூலம், தீங்கு தரும் உடல்நிலை ஏற்பட்டு விடுகின்றது. இந்த நிலைமையினை ஆங்கிலத்தில் Allergy என்று அழகுறக் கூறுவார்கள். இதே முறையில், தமிழிலும் "ஒவ்வாமை" என்று அழகுறக் கூறி அகமகிழ்வு கொள்ளலாமே.

Amusement Park - பொங்கு உவகைப் பூங்கா

நம் கவலைகளை மறந்து சிறிது நேரத்தை இனிமையாகக் கழிப்பதற்காக நாம் பூங்காக்களை நாடிச் செல்கிறோம். இயற்கைக் காட்சிகள் கொலு வீற்றிருக்கும் இவ்விடங்களில், சிரிப் பூட்டும் நிகழ்ச்சிகளையும் பெருங் கிளர்ச்சியுடன் செய்து காட்டுகின்றனர். நம் மகிழ்ச்சியைப் பன் மடங்கு பெருக்கும் இப்பூங்காக்களைப் "பொங்கு உவகைப் பூங்கா" என்று போற்றி யுரைக்கலாமல்லவா?

Antenna- கவர்கம்பி

தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளி பரப்பப்படும் ஒலி, ஒளி அலைகளை உணர்ந்து, அவற்றை ஈர்த்து, வீட்டிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டிக்குள் அனுப்பி வைக்கின்ற பணியை Antenna செய்து வருகின்றது. கம்பிகளால் முறைப்படி இணைக்கப்பட்டுள்ள இந்தக் கருவி, ஒலி, ஒளி அலைகளை நுட்பமாகக் கவர்ந்து கொள்கின்ற காரணத்தால், இதனைக் “கவர் கம்பி” என்னும் மோனைப் பெயரால் மொழி யலாமல்லவா?

Armour - மெய்ம்மறை

Armour என்னும் சொல்லை, இப்போது “கவசம்” என்று குறிப்பிடுகின்றோம். இலக்கி யத்தில் இதற்கொரு நறுந்தமிழ்ச் சொல் இருக்கிறதா என்று பார்த்தால், “ஆம் இருக்கிறது” என்னும் இனிய விடை கிடைக்கின்றது. “சான்றோர் மெய்ம்மறை” அதாவது “போர் மறவர் மெய்ம்மறை” என்று நம்முடைய பழந்தமிழ் இலக்கியமாம் பதிற்றுப் பத்து எடுத்துக் காட்டுகின்றது. இந்தச் சான்றோர் மெய்ம்மறையை போர் மறவர் மெய்ம்மறை என்று புரிந்து கொள்கின்றோம். எனவே Armour என்பது அழகு தமிழில் “மெய்ம்மறை” யாகும். இந்த அறிய சொல்லை அகழ்ந்தெடுத்துக் கொடுத்த தமிழ்ப்

பெரும்புலவர் ப. கோவிந்தசாமி அவர்களை நெஞ்சார வாழ்த்தி நிலைபெறச் செய்யலாமே.

Aspiration - உயர்வுள்ளல்

Aspiration என்பது உயர்வை விரும்பும் நம் உள்ளத்தைப் படம் பிடிக்கும் ஓர் உயரிய சொல்லாகும். இதனைத் தமிழில் எவ்வாறு எழிலுற அமைப்பது என்பதைக் காண்போம். "உயர்வினை அவாவுதல்" என்பது தான் Aspiration என்னும் சொல்லுக்குச் சரியான பொருளாகும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். வானுயர் வள்ளுவர் வாழ்த்தியருளும் "உயர்வுள்ளல்" என்னும் சொல்லானது Aspiration என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு அருமையாகப் பொருந்து வதைப் பார்க்கின்றோம்.

Attestation - சான்றொப்பம்

Attestation, counter signature என்னும் இரண்டு சொற்களும் வேறு வேறு பொருள்களைக் குறிப்பனவாகும். Counter signature என்னும் சொல்லை "மேலொப்பம்" என்று மொழி பெயர்க் கிறோம். ஆகவே Attestation என்னும் சொல்லை, நன்றாக வேறுபடுத்திக் காண வேண்டும். "உண்மை நகல்" என்று சான்றளிக்கும்

கையொப்பத்தை Attestation என்று கூறுகிறோம். எனவே இதனைச் "சான்றுக் கையொப்பம்" அல்லது சுருக்கமாகச் "சான்றொப்பம்" என்று சாற்றி மகிழலாமே!

Auto - தானி

Auto rickshaw என்பதை இப்போது யாரும் அந்த நீளமான பெயரால் அழைப்பதில்லை. Auto, Auto என்று தான் முழங்குகின்றார்கள். தானியங்கி வண்டியை நாமும் "தானி" என்று சுருக்கித் தனித்தமிழில் முழங்குவோமே!

Autograph - வாழ்த்தொப்பம்

பெரிய தலைவர்களையும், திரைப்பட நடிகர் போன்றவர்களையும் காண நேரும்போது, அவர்களுடைய கையொப்பங்களைப் பெறுவதற்குப் பேரார்வம் காட்டுகின்றோம். இதில் மாணாக்கர்கள் முந்திக்கொண்டு செயல்படுவர். தலைவர்களும், நம் அன்பினை ஏற்றுக் கையொப்பமிட்டுத் தருவர். எனவே இதனை "வாழ்த்தொப்பம்" என்று வளமான தமிழில் வகைப்படுத்தலாமல்லவா?

Balcony – முகப்பு மாடம்

வீட்டின் முன்புறத்தில், மாடியுடன் ஒட்டிக் கொண்டு, வெளியில் நீட்டிக் கொண்டுள்ள சிறிய கட்டுமானமாகும் இது. மேற்கூரையுடன்,

ஓரங்கள் சன்னல் போன்று அடைக்கப்பட்டிருக் கின்ற இந்த அமைப்பில் நின்று கொண்டு, தெருவில் செல்வோரைத் தெளிவாகப் பார்க்க முடியும். வீட்டு முகப்பில் உள்ள இந்தச் சிறிய மாடத்தை "முகப்பு மாடம்" என்று கூறி முகம் மலரலாமே.

Banner – பெயர்ச்சீலை

நிறுவனங்களின் பெயர்களைத் தாங்கியுள்ள நீளமான துணியை, Banner என்று பேசுகின்றோம். இத்தகைய துணி, பிற வாசகங்கள் எழுதப் படுவதற்கும், ஏற்றதாகப் பயன்படுகின்றது. இந்தத் துணியின் அல்லது சீலையின் முதன்மையான பயனைக் கருத்தில் கொண்டு, இதற்குப் "பெயர்ச் சீலை" என்று பெயர் சூட்டலாமல்லவா?

Bar – அருந்தகம்

மதுக்கடைகளின் விளம்பரங்களில், ``Bar Attached" என்று பெருமையாக அறிவிக்கின் றார்கள். அமைதியாக அமர்ந்து, ஆர்வமுடன் அருந்துவதற்கு அழகான கூடம் ஒன்று ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது! அமர்ந்து அருந்தும் அழகிய கூடத்தை "அருந்தகம்" என்று அழகு தமிழில் கூறி அகம் மிக மகிழலாமே!

Bill – வடிவுச் சட்டம்

சட்டப் பேரவையின் ஆய்விற்காக, எழுத்து வடிவிலான ஒரு வரைவினை ஆயத்தம் செய்து, அதனைப் பேரவையின் முன்னர் வைக்கின்றோம். இந்த வரைவுச் சட்டத்தை “மசோதா” என்று கூறி வந்தோம். இப்போது “சட்ட முன் வடிவு” என்று கூறி மகிழ்கின்றோம். இதனைச் சிறிது சுருக்கி “வடிவுச் சட்டம்” என்று வழங்கி, மேலும் மகிழ்ச்சியடையலாமே!

Binding wire – கட்டு கம்பி

பெரிய, கெட்டியான கம்பிகளைக் குறுக்கும் நெடுக்குமாக அமைத்து, அவற்றை இணைப்பதன் பொருட்டு, Binding Wire என்னும் சிறுதுண்டுக் கம்பிகளைப் பயன்படுத்துகின்றோம், Binding Wire என்பதைத் தமிழில் எப்படிச் சொல்வது என்று கேட்கின், எளியமுறையில் “கட்டு கம்பி” என்று கனிவாகச் சொல்லலாமே.

Bio-Data – வாழ்க்கைக் குறிப்புகள்

பெற்றோர் பெயர், பிறந்தஊர், பிறந்த தேதி, கல்வித் தகுதி போன்ற தன்னைப் பற்றிய விவரங்களைத் தொகுத்துக் கூறுவது வழக்கம். இதனை ஆங்கிலத்தில் Bio-data என்று கூறுவார்கள். தன்னைப் பற்றிய விவரங்களாக இது அமைகின்ற காரணத்தால், இதனைத் “தன் விவரக் குறிப்பு” என்று தடையின்றிச் சொல்லி

மகிழலாம். ஆயினும், இதனையே "வாழ்க்கைக் குறிப்புகள்" என்று வழங்குவோமாயின், எளிமையும், இனிமையும் கொஞ்சி விளையாடுமல்லவா?

Blood group – குருதி வகை

நோயாளிகளுக்குக் குருதிக் குறைவு ஏற்படும் போது, மற்றவர்களின் குருதியை உடம்பில் செலுத்தி, அவர்களைப் பிழைக்க வைப்பது வழக்கம். அவ்வாறு செலுத்தும் போது, அந்தக் குருதி நோயாளியின் உடம்புக்குப் பொருத்தமான குருதி வகையாக இருத்தல் வேண்டும். அதாவது அதே Blood group ஆக அமைய வேண்டும். இதை, நல்ல தமிழில் "குருதி வகை" என்று குறிப்பிட்டு மகிழலாமே.

Blood Pressure – குருதிக் கொதிப்பு

இதனை, நல்ல தமிழில், "குருதி அழுத்தம்" என்று குறிப்பிடலாம். எனினும் "குருதிக் கொதிப்பு" என்பதே மேலும் சிறந்த மொழியாக்கமாக அமையுமன்றோ?

Bogey – பூச்சாண்டி

காரணமின்றி அச்சத்தை ஊட்டுகின்ற பொருளைப் ``Bogey'' என்று கூறுகின்றோம். குழந்தைகளை அச்சுறுத்தும் போதும் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறோம். அரசியலிலும் இந்தச் சொல் பெரிதும் பேசப்படுகின்றது.

"பூச்சாண்டி காட்டுகிறார்" என்று சொல்வது வழக்கந்தானே. அவ்வாறாயின் Bogey என்னும் சொல்லைப் பூச்சாண்டி என்று எடுத்துச் சொல்லி அச்சம் தவிர்க்கலாமே!

Bona-fide – மெய்யான

கல்லூரியில் படித்து வந்த நாட்களில், ஆண்டு நிறைவு நேரத்தில், துறைத் தலைவர் "இது இந்த மாணவரின் "Bona-fide record" என்று எழுதிச் சான்றொப்பமிடுவார். Bona-fide record என்பது genuine record என்று பொருள்படும். இதனை "உண்மையான பதிவுகள்" என்று கூறலாம். ஆயினும், "மெய்யான" குறிப்புகள் என்று மொழி பெயர்த்தால், தமிழின் வளத்தைத் தக்கவாறு நிலைநாட்டலாமல்லவா?

Bonus – மகிழ்வூதியம்

சம்பளம், அகவிலைப்படி, பிற படிகள் என வழக்கமான ஊதியங்கள் அமைகின்றன. இவற்றைத் தவிர, எதிர்பாராமலும் மிகையாகவும் பெறுகின்ற ஊதியத்தை Bonus என்று கூறுகின் றோம். பூரிப்பைத் தருகின்ற இவ்வூதியத்தை "மகிழ்வூதியம்" என்று மகிழ்ச்சியாகக் கூறலா மல்லவா?

Boon – அருட்கொடை

Boon என்னும் சொல்லை நாம் அடிக்கடி கேட்டு மகிழ்கின்றோம். இதனை வரப்பிரசாதம் என்று மொழி பெயர்ப்பார்கள். இந்தச் சொல்லுக்கு மாற்றாக ஓர் அரிய தமிழ்ச் சொல் கிடைக்குமா என்று ஆராய்வது நல்லது. நமது கோரிக்கையின் பேரில், அல்லது வேண்டுதலின் பேரில், நமக்கு நல்வாழ்த்துகளுடன் கிடைக்கின்ற சிறந்த நன்மையே Boon — என்பதாகும். பொது வாக இந்த நன்மைகளை "ஆண்டவனின் அருட்கொடை" என்று கூறுவார்கள். அருட் கொடை என்று மட்டும் கூறினாலே அது ஆண்ட வனின் "அருட்கொடை" என்று தெளிவாகத் தெரிந்துவிடும். எனவே, Boon என்பதை "அருட் கொடை" என்று சுருக்கிச் சொல்லி மகிழ்ச் சியைப் பெருக்கிக் கொள்ளலாமே!

Botheration – சிறுதொல்லை

"தொல்லை" என்னும் சொல்லை நாம் பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும். ஏனென் றால், அது பலவிடங்களில் காட்சி தரும் அரிய சொல்! சிலர், நம்மை, ஓயாமல் நச்சரித்துக் கொண்டிருப்பார்கள். ஆயினும் இதனைப் பெரிய தொல்லை அல்லது துன்பம் என்று கருதிவிட முடியாது. எனவே "சிறிய தொல்லை" என்னும் பெயர்ப்புச் சிறப்பாக அமையுமல்லவா?

சில சமயங்களில் “இது பெரிய Botheration ஆகி விட்டது” என்று சினந்து கூறுவோம்! சிறிய தொல்லையைப் பெரிய தொல்லையாக மாற்றும் ஆற்றல் நம்மிடம் தானே உள்ளது!

Bounced-cheque – மதிப்பிழந்த காசோலை

வங்கிகளில் நடமாடுகின்ற தொடரைப் பற்றி இப்போது சிந்திப்போம். ``Cheque-Bounce ஆகி விட்டது” என்று பேசுவதைப் பார்க்கிறோம். அடிக்கடி இப்படிப்பட்ட செய்திகளை நாம் கேட்பதால், இதற்கு ஒரு நல்ல மொழி பெயர்ப்புத் தேவை என்பது நன்கு புலப்படுகிறது. வங்கிக் கணக்கில், பணம் இல்லாத காரணத்தால், குறிக்கப்பட்ட தொகை கொடுக்கப் படாமல், காசோலை திருப்பி வந்து விடுகிறது. இதற்குப் பெயர் தான் Bounced cheque. இதனை “மதிப்பிழந்த காசோலை” என்று மதிப்பாகச் சொல்லி மகிழ்ச்சியடையலாமே!

Brain Wash – உரையேற்றுதல்

Brain Wash என்பதற்கு இணையான தமிழ்ச் சொல், கிராமப்புறங்களிலே பெரு வழக்காகப் பேசப்படுகின்றது. மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி, கருத்தை ஏற்கக் கட்டாயப்படுத்துகின்ற முயற்சியாகும் இது. கணவன் - மனைவியைப் பொறுத்த வரையில், “தலையணை மந்திரம்” என்று இது பேசப்படும். பொதுவகையாக, மக்கள்

யாவரையும் குறிக்குமிடத்து "உரையேற்றுதல்" என்னும் செறிவான சொல் பயன்படுத்தப் படுகிறது. தமிழின் வளம் கண்டு நாம் உள்ளம் தழைக்கலாமே.

Brief case – குறும் பேழை

ஆவணங்களைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கேற்ற, தட்டையான, சிறிது நீளமான பெட்டியாகும் இது. அடக்கமான, அழகான இந்தப் பெட்டியின் பெயரும் கவர்ச்சியாக அமைந்துள்ளது. குறுந்தடி, குறும்பலா என்னும் சொற்களை நாம் நன்கு அறிவோம். அவ்வாறா யின் Briefcase என்பது "குறும்பேழை" தானே.

Buffet – பரப்புணவு

நீளமான மேசைகளில், சுவையான உணவுகள், வகை வகையாக அடுக்கி வைக்கப் பெற்றுள்ளன. விருந்தினர் அவற்றை, விருப்பம் போல், தாமாகத் தேர்ந்தெடுத்து, வேண்டும் அளவு, உண்டு மகிழலாம். பார்க்குமிடமெங்கும் பாங்குறப் பரப்பி வைக்கப் பெற்றுள்ள இவ்வுணவு வகை களைப் "பரப்புணவு" என்று பகர்ந்து மகிழலா மல்லவா?

Buzzer – இமிரி

"வண்டினம் முரலும் சோலை" என்று சொல்வது வழக்கம். வண்டினத்தின் இனிய

ஒலியை "முரலும்" என்னும் சொல்லால் குறிக்கின்றோம். Buzzer என்று சொன்னவுடனேயே, ஓர் ஒலி நம் செவிகளில் கேட்பது போலத் தோன்றும். "இமிர்தல்" என்னும் சொல்லும் வண்டினத்தின் ஒலியை நினைவூட்டுகின்றது. "இமிர்தல்" என்பது "ஒலித்தல்" என்று பொருள்படுகின்றது. இமிரும் Buzzer-ஐ "இமிரி" என்று இனிமையாக அழைக்கலாமே.

Cable car – வடவூர்தி

பயணிகளை, உயரமான மலைக்கு ஏற்றிச் செல்லவும், கீழே கொண்டு வந்து இறக்கி விடவும்; அதே போன்று ஒரு தீவிலிருந்து இன்னொரு தீவிற்குக் கொண்டு சேர்க்கவும், கம்பி வடத்தின் துணை கொண்டு இயங்கிப் பயன்படுகின்ற ஊர்தியை ``cable car" என்று கூறுகின்றோம். இதனைக் "கம்பிவடக்கவினூர்தி" என்று உள்ளக் களிப்புடன் உரைக்கலாம். இருந்த போதிலும் சுருக்கமாக "வடவூர்தி" என்று கூறித் தமிழின் வளம் காட்டலாமல்லவா?

Canopy – மேலாப்பு

கட்டடக்கலையில் canopy என்பது ஒரு முக்கிய அமைப்பாகும். வீட்டின் முகப்பில், கூரை போன்றது. கம்பங்கள் இல்லாமல், அழகிற்காக நீட்டிக் கட்டப்படும் அமைப்பே canopy ஆகும். இதனை "மேற்கட்டி" என்று குறிப்பிடுவது உண்டு.

மேகங்கள் மேற்கட்டி போல் உலாவித் திகழ்வதை "நாச்சியார் திருமொழி" நயமுறப் படம் பிடிக்கின்றது.

"விண்ணீல மேலாப்பு விரித்தாற் போல் மேகங்கள்
தெண்ணீர்ப்பாய் வேங்கடத்து என் திருமாலும்
போந்தானே"

என்று, மேகக்கூட்டத்திற்கு மெருகேற்றுகிறார் நற்றமிழ் நாச்சியார். canopy என்பதற்கு "மேலாப்பு" என்பது மேலான சொல்லாக்கம் என்பதில் எட்டுணையும் ஐயமுண்டோ? இந்த அரிய செய்தியை அனைவர்க்கும் உணர்த்திய மகா வித்துவான் மே. வி. வேணு கோபாலப் பிள்ளை அவர்களை நினைந்து நினைந்து போற்று வோமாக.

Case-Sheet – நோயாளர் குறிப்பேடு

அகநோயாளி (In-Patient) ஒவ்வொருவருக்கும் ஒரு case-sheet இருக்கும். நோயாளியின் கட்டிலி லேயே இது கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். நோயாளியின் முன் வரலாறும், அவ்வப்போது செய்யப்படும் பரிசோதனைகளின் விவரங்களும், இதில் குறிக்கப்பெறும். தேவைப்படும்போது, கூடுதல் - தாள்கள் இணைக்கப்படுவது உண்டு. ஆகவே, casc-sheet என்பதை "நோயாளர் குறிப் பேடு" என்று விளக்கம் செய்யலாமல்லவா?

Cellular Telephone – செல்வழிப்பேசி

புதுப்புது வகையான தொலைபேசிகள் வந்து கொண்டே இருக்கின்றன. பயணம் செய்து கொண்டிருக்கும் போதே, குறிப்பிட்ட எல்லைக்குள் (cell), தொலை பேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள Cellular Telephone உதவு கின்றது. வழியில் சென்று கொண்டிருக்கும் போதே தொலைபேசியில் உரையாடுவதற்கு வசதி கிடைப்பதால், இதனைச் "செல்வழிப்பேசி" என்று செப்பி மகிழலாமே!

Charisma – மனங்கவர் மாண்பு:

இயற்கையில் அமைந்த இனிய பண்புகளால், மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் ஒரு சில தலைவர்களுக்கே உண்டு. மக்களைத் தம் வயப்படுத்திக் கொள்ளும் மாய வித்தை போன்ற இந்தப் பண்பினை ஆங்கிலத்தில் Charisma (Karizma) என்று கூறுவார்கள். இதனை, அழகு தமிழில், "மனங் கவர் மாண்பு" என்று மகிழ்ச்சியாக மொழி பெயர்க்கலாமே.

Chordless-Telephone – கைவழிப்பேசி

கம்பித் தொடர்பில்லாமல் கையில் வைத்துக் கொண்டு பேசுவதற்கு வசதியாக இருக்கிற தொலை பேசியை Chordless Telephone என்று சொல்கிறோம். வீட்டிலோ, வீட்டுப் புறங்களிலோ, கையில் வைத்துக் கொண்டு தொலைபேசி உரை

யாடலைத் தொடர்வதற்கு, இந்தத் தொலைபேசி உதவியாக இருப்பதால், இதைக் "கைவழிப் பேசி" என்று கனிவான தமிழில் கூறி மகிழலாமல்லவா?

Circus – அருந்திறல் அரங்கு

Circus என்பதன் நேர்மொழி பெயர்ப்பு "வட்டரங்கு" என்பதாகும். இவ்வட்டரங்குகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் "அருந்திறல்களை" வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாக அமைகின்றன அல்லவா? அவ்வாறாயின், "வட்டரங்கு" என்பதற்குப் பதிலாக "அருந்திறல் அரங்கு" என்னும் பெயரினைப் பெருமையுடன் அமைத்து, அகம் மிக மகிழலாமே.

Clinic – மருத்துவக்கூடம்

Hospital என்பதற்கு "மருத்துவமனை" என்னும் பெயர் நன்கு பழகிவிட்டது. Consulting Room என்பதை "மருத்துவ காண்பகம்" என்று ஏற்கெனவே நாம் தெரிவித்துள்ளோம். அவ்வாறாயின் Clinic என்பது என்ன? இந்தப் பெயர் தனியார் மருத்துவ மனையையும் குறிக்கின்றது. புற நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் இடமாகவும் அமைகின்றது. ஆகவே, இதற்கு வளமான நம் தமிழில் "மருத்துவக் கூடம்" என்னும் பெயரை இனிதாக அமைக்கலாமல்லவா? இந்த அரிய மொழி பெயர்ப்பை அமைத்துத் தந்த தமிழறிஞர்

ஊ. ஜெயராமன் அவர்களை நாம் பாராட்டி மகிழ்வோம்.

Code – தொகுப்புச்சட்டம்

முறைப்படி வரிசைப்படுத்தித் தொகுக்கப் பெற்ற சட்டங்களை Code என்று குறிக்கின்றோம். இதற்கு ``The Indian Penal Code" என்பது ஓர் எடுத்துக் காட்டாகும். பல்வேறு குற்றங்களுக் குரிய தண்டனைகள் இதில் தொகுக்கப் பெற்றுள்ளன. The Financial Code, The Account Code என்பனவற்றையும் நாம் நன்கு அறிந்துள்ளோம். எனவே Code என்பதைத் "தொகுப்புச் சட்டம்" என்று கூறி உள்ளம் திளைக்கலாமே.

Coma – உணர்வறு உறக்கம்

நோயாளிகள் ஆழ்ந்த மயக்க நிலையில் இருப்பதை Coma என்று கூறுகின்றோம். இவர்கள் நீண்ட நாட்கள் இப்படி இருப்பதும் உண்டு. சில நேரங்களில் விரைவில் உணர்வு திரும்பி விடுவதும் உண்டு. நுட்பமான இந்த மயக்க நிலையை "உணர்வறு உறக்கம்" என்று குறிப் பிடலாமல்லவா?

Commitment – ஏற்பிசைவு

அலுவலகங்களில், Concurrence என்னும் சொல்லும் Commitment என்னும் சொல்லும் அடிக்கடி புழங்குகின்ற சொற்களாகும்.

இசைவைத் தெரிவிக்கும்போது, அதனை concurrence என்று கூறுகின்றோம். ஆனால் Commitment என்பதோ ஒருவர் தருகின்ற வாக்குறுதியையும் உள்ளடக்கியதாக உள்ளது. எனவே இதனை "ஏற்பிசைவு" என்னும் எழில்மிகு முறையில் இனிக்கச் சொல்லலாமல்லவா?

Common Law – எழுதாச் சட்டம்

இது, சட்டப்பேரவையால் இயற்றப் பெறாத சட்டமாகும். ஆயினும் இயற்றப் பெற்ற சட்டத்தைப் போன்றே ஆற்றல் பெற்றதாகும். எழுதி நிறைவேற்றப் பெறாத இந்தச் சட்டத்தை "எழுதாச் சட்டம்" என்று எடுத்துக்கூறிய சட்டத் துறைச் சொல்லாக்க வல்லுநர் வீ. சந்திரன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

Compact-Disc – செறிவுவட்டு

Compact disc என்பதற்கு, "கச்சித வட்டு", "குறுந்தட்டு" போன்ற பல மொழி பெயர்ப்புகள் இப்போது புழங்கி வருகின்றன. ஒரு சிறிய வட்டு போல் அமைந்துள்ள தகட்டில், செய்திகள் பதிவு செய்யப்படுகின்றன. எனவே, இதனைப் பதிவு வட்டு என்று கூறினும் தவறில்லை. ஆயினும் பாடல்கள், சொற்பொழிவுகள், பாடங்கள் போன்ற பல செய்திகள், இச்சிறிய தகட்டில், பதிவு செய்யப் பெற்றுச் சேமித்து வைக்கப் படுவதை நாம் அன்றாடம் காண்கின்றோம்.

செய்திகளைச் செறிவாகக் கொண்ட இந்த வட்டினைச் "செறிவுவட்டு" என்று சிறப்பித்துக் கூறலாமே!

Complex – இணைவம்

தொடர்புடைய தொழில்களும், பொருள்களும், வசதிகளும் ஒரே தொகுப்பாக ஓரிடத்தில் அமைந்திருக்கும் போது, அதனை Complex என்று கூறுகின்றோம். இந்நிலையில், வளாகம், இணையம் என்னும் இரண்டு இனிய தமிழ்ச் சொற்கள், ஏற்கெனவே பொருத்தமான வேறு இடங்களில் பயன்படுத்தப்பெற்று வருவதை நாம் அறிவோம்.

இப்போது, "இணையம்" என்னும் சொல்லில் ஒரு சிறு மாற்றம் செய்தால், அது, "இணைவம்" என்று மாறிவிடுமல்லவா? Complex என்பதை "இணைவம்" என்னும் இனிய தமிழில் குறிப்பிட்டால், தமிழின் நுட்பம் தெற்றென விளங்குமே!

Complication - குறுக்கிடுநோய்

ஒரு நோய்க்காக மருத்துவம் செய்து கொண்டிருக்கையில், இடையில், இன்னொரு நோய் ஏற்பட்டுவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது மருத்துவம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது. ஒரு நோய்க்குக் கொடுக்கப்படும் மருந்து, முன்னரே ஏற்பட்டுள்ள நோய்க்குச் சிக்கலை ஏற்படுத்தி விடுகிறது. புதிதாகத்

தோன்றிய இச்சிக்கலைக் "குறுக்கிடு நோய்" என்று கூறித் தெளிவு பெறலாமல்லவா!

Conservative – பழைமை விரும்பி

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்று, இலக்கண நூலாகிய நன்னூல், நவில் கின்றது. பழையன இயல்பாகவே கழிதல் வேண்டும். புதியன இயல்பாகவே புகுதல் வேண்டும். பழையனவற்றை வலிந்து கழித்தலும், புதியனவற்றை வலிந்து புகுத்தலும் தவறாகு மென்று புலவர்கள் விளக்கம் தருவார்கள். ஆனால் ஒரு சிலரோ, பழைமையை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு அதில் உறைந்து நிற்பார்கள். பழைமையை விரும்பும் இவர்களை Conservative "பழைமை விரும்பி"கள் என்று கூறுகின்றோம்.

Consultant – கருத்தளிக்குநர்

நாம் பல நேரங்களில் பிறருடன் கலந்து பேசிப் பின்னர் முடிவெடுக்க விரும்புகின்றோம். அவ்வத்துறையில் உள்ள வல்லுநர்களோடு கலந்து பேசும்போது தான், நமக்கொரு தெளிவு ஏற்படு கின்றது. இவ்வாறு நமக்குத் தேவையான அறிவுரையை வழங்கும் வல்லுநரை நாம் Consultant என்று கூறுகின்றோம். கனிந்த

கருத்துரை வழங்கும் வல்லுநரை "கருத்தளிக்குநர்" என்று அழைத்து நாம் களிப்படையலாமல்லவா!

Consulting Room – மருத்துவக் காண்பகம்

மருத்துவர், நோயாளியுடன் கலந்து பேசி, நோயின் தன்மையை ஆராய்ந்து பார்ப்பதற்காகப் பயன்படுகின்ற அறையை அல்லது இடத்தை, Consulting Room என்று கூறுகின்றோம். மருத்துவரிடம் ஆய்வுரை பெற்றுக் கொள்ளும் இந்த இடத்தை "மருத்துவக் காண்பகம்" என்று மகிழ்ச்சியாகக் கூறலாமே. (வழக்கறிஞர்களுக்கும், பொறியாளர்களுக்கும் இந்த "ஆங்கிலத்தொடர்" பயன்படுத்தப் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

Container – சரக்குப் பெட்டகம்

சென்னைத் துறைமுகத்தில் ஏற்றுமதிப் பணியும் இறக்குமதிப் பணியும் அன்றாடம் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய சரக்குகள், பெரிய பெரிய பெட்டிகளில் அடுக்கப் பெற்று, சரக்குந்துகளில் (லாரிகள்) ஏற்றி அனுப்பப்படுகின்றன. இந்தப் பெட்டிகளை Container என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள். இதனைச் "சரக்குப் பெட்டகம்" என்று சரியான தமிழில் நாம் சொல்லி மகிழலாமே.

Conveyor Belt – செலுத்துப்பட்டை

பெரிய தொழிற்சாலைகளில் Conveyor Belt என்னும் கருவி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது மேலும் கீழுமாகவும், சமநிலையிலும் ஓடிக் கொண்டிருப்பதை வியந்து பார்க்கிறோம். இது, சுமைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செலுத்த உதவுகின்றது. இந்த அழகிய, அரிய சாதனத்தை "செலுத்துப் பட்டை" என்னும் செந்தமிழ்ச் சொல்லால் அழைத்து மகிழலாமே.

Counselling – சேர்ப்பு அறிவுரை

பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சேர்ந்து படிக்க விண்ணப் பிக்கும் மாணவர்கள் Counselling என்னும் நேர் காணலுக்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு நேரில் சென்று பேசும்போது, எந்தெந்தக் கல்லூரிகளில் இடங்கள் இருக்கின்றன, எந்தெந்தப் பாடத்தில் படிக்க வாய்ப்பு இருக்கிறது என்பன போன்ற செய்திகள் மாணவர்களுக்கு விளக்கப்படுகின்றன. கலந்து பேசிய பின்னர், மாணவர்கள் முடிவு செய்கின்றனர். கல்லூரியில் சேருவதற்கான அறிவுரைகளைக் கல்வித் துறை அதிகாரிகள் வழங்குகின்றனர். இதனையே நாம் Counselling என்று கூறுகின்றோம். அவ்வாறாயின் Counselling என்பது "சேர்ப்பு அறிவுரைதானே".

Courier – நேரஞ்சல்

Courier என்னும் சொல்லுக்கு ஏற்பட்டுள்ள பழைய பொருள் செய்தியாள் என்பதாகும். இந்தப் பொருள் காலப் போக்கில் விரிந்து கொண்டே போவதைப் பார்க்கின்றோம். விரை வாக அனுப்பவேண்டிய கடிதம், சிப்பம் முதலானவற்றை இது இப்போது குறிக்கின்றது. அஞ்சல்களை அஞ்சல் நிலையத்தின் மூலமாகத் தான் அனுப்புவது வழக்கம். ஆயினும் விரை வாகச் சென்று சேர வேண்டிய சூழ்நிலையில் CourierService மூலமாக அனுப்பி வைக்கின்றோம். ஆகவே Courier என்ற சொல்லை நேரஞ்சல் என்று நேராக மொழி பெயர்த்து நெஞ்சம் மகிழலாமே.

Courtesy Call – அன்புக்காணல்

கோரிக்கை எதுவுமின்றி, உயர்ந்த நிலையில் இருக்கும் பெரியோரை, நேரில் சென்று காண்பதையே Courtesy call என்று குறிக்கின்றோம். மரியாதை நிமித்தமாக நடைபெறும் இந்த நேர்க்காணல், கனிந்த அன்பையே அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றது. எனவே, இந்த நேர்க்காணலை, “அன்புக்காணல்” என்று அழைத்து மகிழலா மல்லவா ?

Cut-out – காட்சிப் பேருரு

மரப்பலகை, ஒட்டுப் பலகை, காகித அட்டை முதலியவற்றைக் கொண்டு, வெட்டி அமைக்கப் பெறுகின்ற உருவத்தை ``Cut-Out" என்று கூறுகின்றோம். ஆயினும், நடைமுறையில் நோக்கும்போது, காட்சிக்கு வைக்கப் பெற்ற பெரிய உருவமாக அது மிளிர்கின்றது. அவ்வாறா யின், அதனைக் “காட்சிப் பேருரு” என்று கற்கண்டுத் தமிழில் எடுத்துக் கூறி இன்புறலாமே!

Cut service – குறைப்புச் சேவை

பேருந்துகள், குறித்த ஓரிடத்திலிருந்து புறப்பட்டுக் குறித்த ஓரிடத்திற்குச் சென்று சேர் கின்றன. சில நேரங்களில், சென்றடையும் இடத் திற்குப் பதிலாக, முன்னதான ஓரிடத்திலேயே நின்று விடுமாறு ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஆகையால், Cut service என்பதைக் “குறைப்புச் சேவை என்று குறிக்கலாமல்லவா?

Dais – கூட்ட மேடை

“அவர் Dais-இல் அமர்ந்துள்ளார்” என்று பேசுகின்றோம். பேச்சாளர்கள் அமருவதற்கு வசதியாக ஒரு மண்டபத்தில் அமைக்கப் பட்டுள்ள உயரமான மேடையைத்தான் நாம் Dais என்று குறிப்பிடுகின்றோம். இதனைக் “கூட்ட மேடை” என்று கூறி மகிழ்ச்சி கொள்ளலா மல்லவா?

Dean – கலைப்புல முதல்வர்

அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு துறைகள் இயங்குகின்றன. அதே போன்று, பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு ஆராய்ச்சித் துறைகள் இருக்கின்றன. இவற்றைப் "புலங்கள்" என்று அழைக்கின்றோம். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், மருத்துவ மனைக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் பொதுவாக ஒரு Dean இருக்கிறார். இவரை மருத்துவ மனை முதல்வர், மருத்துவக் கல்லூரி முதல்வர் என்று எளிதாகச் சுட்ட முடியும். பொறியியல் கல்லூரி போன்ற சில கல்லூரிகளில், ஒரே கல்லூரியில் Principal இருக்கிறார், Dean-ம் இருக்கிறார். இத்தகைய சூழ்நிலைகளில் Dean–ஐ எவ்வாறு அழைப்பது? புல முதல்வராக இருக்கும் இவரை - பல்வேறு அறிவியல் கலைகளின் பொறுப்பை ஏற்றுள்ள இவரை "கலைப்புல முதல்வர்" என்று கனிவாகக் கூறிக் களிப்படையலாமே!

Decade – பதிற்றாண்டு

பத்தாண்டுகள் கொண்ட காலப்பகுதியை Decade என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். நாமோ நமது தமிழில் Ten years என்று பொருள்படும் "பத்தாண்டுகள்" என்றே சொல்லி வந்தோம். ஆங்கிலம் போல இதைச் சுருக்கிச் சொல்ல முடியவில்லையே என்னும் ஏக்கம் இருந்து

வந்தது. இந்த ஏக்கத்தைத் தீர்த்து வைத்தவர் தான் முனைவர் இரா. மதிவாணன் அவர்கள். "பதிற்றுப்பத்து" என்னும் பழந்தமிழ் இலக்கியம் வழிகாட்ட, "பதிற்றாண்டு" என்னும் பலாச்சுளை கிடைத்துவிட்டது! வாழ்க முனைவர் இரா. மதிவாணன்.

Delay – நெடுநீர்மை

Delay என்னும் சொல் நமக்கு நன்கு தெரிந்த ஒரு சொல்லாகும். ஏனெனில், நடைமுறையில் நாள்தோறும் நாம் இதைத்தான் செய்து வருகின்றோம். இந்தச் சொல்லைத் "தாமதம்" "சுணக்கம்", "காலத்தாழ்வு" என்றெல்லாம் மொழிப் பெயர்க்கின்றோம். இவற்றைத் தவிர வேறு ஓர் அரிய சொல்லும் அழகு தமிழில் பொதிந்து கிடக்கின்றது!

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. ஒரு செயலை நீட்டித்துச் செய்வதே "தாமதம்" என்பதாகும். இதனையே வள்ளுவர் "நெடுநீர்மை" என்று குறிப்பிடுகின்றார். என்னே இனிமை! என்னே வளமை!

Delegate – பேராளர்

ஒரு நிறுவனத்தின் சார்பாக வருகை தந்து சிறப்பிப்பவரை Representative என்று அழைக்கின்

றோம். இதே போன்று, ஒரு பெரிய மாநாடு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, அவற்றில் கலந்து கொள்வோரை Delegate என்று அழைக்கின்றோம். மணிவாசகர் மகிழ்ச்சியாகப் பாடுகின்றார். "யாவர்க்கும் காண்டற்கு அரியான், எமக்கு எளிய பேராளன்" என்று அவர் பெருங் களிப்புடன் பேசுகின்றார். "பேராளன்" என்னும் சொல்லை உற்று நோக்கினால் நமக்குத் தேவைப் படும் "பேராளர்" என்னும் நல்ல மொழி பெயர்ப்புப் பிறந்து விடுகிறதல்லவா?

Diagnosis – கண்டறிகை

இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்பது பொதுவாக எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. ஆயினும் ஏற்பட்டுள்ள நோய், எது என்பதைக் கண்டறிவது தான் கடினமான செயலாக இருக்கிறது. நோயைக் கண்டறியும் செயலை, ஆங்கிலத்தில் Diagnosis என்று சொல்வது வழக்கம். இதனை அழகுதமிழில், "கண்டறிகை" என்று கூறிக் களிப்படையலாமல்லவா?

Dietician – உணவு வகைப்படுத்துநர்

மருத்துவ மனைகளில் Dietician என்னும் பதவியொன்று இருந்து வருகின்றது. பத்திய உணவுகளிலும் சத்துணவுகளிலும் இவர் சிறந்த வல்லுநராக விளங்குகின்றார். இன்ன நோய்க்கு இன்ன உணவு என்று வகைப்படுத்துவது

இவருடைய தலையாய பணியாகும். இவருக்கு, "உணவு வகைப்படுத்துநர்" என்னும் இனிய பெயரைச்சூட்டி, உள்ளம் குளிர வாழ்த்துக் கூறலாமே.

Diploma – பட்டிகைப்படிப்பு

Degree Course என்பதைப் "பட்டப்படிப்பு" என்று மொழி பெயர்த்துள்ளோம்-Diploma Course என்பதைப் "பட்டயப் படிப்பு" என்று இப்போது அழைத்து வருகின்றோம். இது சரியான மொழி பெயர்ப்புதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். Charter என்பதைப் "பட்டயம்" என்றும் Chartered Accountent என்பதைப் "பட்டயக் கணக்காளர்" என்றும் நாம் நீண்ட நாட்களாக ஏற்கெனவே வழங்கி வருகின்றோம். அவ்வாறாயின், "பட்டயப் படிப்பு" என்னும் மொழி பெயர்ப்புப் பொருந்தாமல் போகின்றது. "பட்டிகை" என்னும் ஓர் அழகிய சொல் தமிழில் இருக்கிறது. இதற்கு "இராச பத்திரம்" என்னும் விளக்கமும் அமைந்துள்ளது. அவ்வாறாயின், Diploma course என்பதைப் "பட்டிகைப் படிப்பு" என்று கூறிப் பளிச்சிடச் செய்யலாமே!

Do's and Don'ts – செய்வன தவிர்வன

ஒரு பொருளை விளக்கிச் சொல்லும் போது, ஒரு சிலவற்றைச் செய்ய வேண்டுமென்றும், வேறு சிலவற்றைச் செய்யலாகாதென்றும் நாம் பேசுகின்

றோம். இவற்றை ஆங்கிலத்தில் Do's என்றும் Don'ts என்றும் கூறுகின்றனர். இவற்றிற்கு ஒப்பற்ற உரையாசிரியர் பரிமேலழகர் "செய்வன", "தவிர்வன" என்னும் தேன் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இவற்றை நாமும் ஏற்று நறுமணம் கமழச் செய்யலாமே!

Dummy – பேதை

"அவர் ஒரு Dummy" என்று எடுத்துக்கூறி, இதற்குரிய மொழிபெயர்ப்பு என்ன என்று கேட்டார் என் நண்பர். பல பொருள்களை யுடைய இந்தச் சொல்லுக்கு "அறிவிலி" என்னும் பொருளும் இருக்கிறது. இந்தப் பொருளை நாம் எடுத்துக் கூற வேண்டுமென்பது நண்பரின் ஆசை. அவருக்கு யார் மீதோ சினம் ஏற்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அறிவிற் குறைந்தவர்களும் அறிவிற் சிறந்த வர்களும் இருக்கின்றார்கள். ஆயினும் அறவே அறிவில்லாதவர் இருப்பதாகத் தெரியவில்லை! வள்ளுவர் ஓர் அருமையான குறளை அருளி யுள்ளார்.

"ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக்கடை"

என்பது அவருடைய அமுத வாக்கு. "அவர் ஒரு Dummy" என்றால், "அவர் ஒரு பேதை" என்று ஒரு நொடியில் உரைத்து விடலாமல்லவா?

Dynamo – மின்னாக்குப் பொறி

எந்திர சக்தியை மின் சக்தியாக மாற்றுகின்ற கருவியை Dynamo *என்று அழைக்கின்றோம். அடிக்கடி பேசப்படும் இந்த அழகிய ஆங்கிலப் பெயரை, அழகு தமிழில் "மின்னாக்குப் பொறி" என்று மேன்மைப் படுத்தலா மல்லவா?*

E-Mail – மின்னணு அஞ்சல்

Electricity *பற்றிய செய்திகளை "மின்னியல்" என்றும்* Electronics *பற்றிய செய்திகளை, "மின்னணுவியல்" என்றும் வேறுபடுத்திக் கூறுகின்றோம்.* E-Mail *என்பதன் விரிவு* Electronic Mail *என்பதாகும். இன்று செய்திகளை விரைவாக அனுப்புகின்ற முறைகளில் ஒன்றாக இருப்பது* E-Mail *ஆகும். இதனை "மின்னணு அஞ்சல்" என்று கூறி மின்னச் செய்யலாமே!*

Earthing – தரையிடல்

மின்சார சாதனத்தைத் தரையுடன் இணைப் பதற்குக் கம்பி ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் மின்னோட்டப் பாதை நிறைவு பெறுகின்றது. Earthing *என்னும் சொல்லை ஆங்கிலத்தில் இருப்பதைப் போலவே, தமிழிலும் "தரையிடுதல்" அல்லது "தரையிடல்" என்று சுருக்கிச் சொல்லலாமல்லவா?*

Ego – தற்கோள்

மூன்று எழுத்துக்களாலாகிய Ego என்னும் ஆங்கிலச் சொல் பொருள் பொதிந்த சொல்லாக மிளிர்கின்றது. தற்பெருமை, தன் வியப்பு, தன் முக்கியத்துவம் என்று இதனை விளக்கிக்கூறலாம். தன்னைப் பற்றிய உயர்ந்த எண்ணமே Ego ஆகும். இதனை நாலடியார் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது.

"எம்மை அறிந்திலீர் எம்போல்வார் இல்லென்று
தம்மைத்தாம் கொள்வது கோளன்று–தம்மை
அரியரா நோக்கி அறனறியும் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்"

Ego என்பதன் கருத்தை விளக்குவதற்காகவே எழுந்த பாடலோ இது என்று வியந்து பாராட்டும் வகையில் அருமையாக அமைந்துள்ளது. இப் பாடல், தம்மைத்தாம் கொள்வது, என்னும் தொடர் 'தற்கோள்' தானே!

Electric Cardiograph – இதய மின்னலை வரைபடம்

மின்கருவியைப் பயன்படுத்தி, இதயத்தின் அசைவுகளைப் பதிவு செய்து, இதய நோயை அறிந்து கொள்ள முடிகிறது. இதய மின் அலைக் கருவியின் மூலம் கிடைக்கும் வரைபடத்தை "இதய மின் அலை வரைப்படம்" என்று இனிமை யாகக் கூறலாமே.

Emergency Lamp – நெருக்கடி நேர விளக்கு

நல்ல பணிகளை நாம் ஆர்வமுடன் செய்து கொண்டிருக்கும் போது, சற்றும் எதிர் பாராமல், மின் தடங்கல் ஏற்பட்டுவிடுகின்றது. நாம் பெருத்த ஏமாற்றத்திற்கும் நெருக்கடிக்கும் ஆளாகின்றோம். இப்பெருங்குறையை நீக்க Emergency Lamp பெரிதும் உதவுகின்றது. இதனை "நெருக்கடி நேர விளக்கு" என்று விளம்பி மகிழலாமல்லவா?

Enactment – இயற்றுச் சட்டம்

சட்டப்பேரவையில் இயற்றப் பெற்ற சட்டத்தை அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை Enactment என்று கூறுகின்றோம். அவ்வாறாயின் "இயற்றிய சட்டம்" அல்லது "இயற்றுச் சட்டம்" என்பது தானே இதற்கேற்ற இனிய பெயராக அமையும்?

Evolution – படிமுறை வளர்ச்சி

Evolution என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாக 'பரிணாம வளர்ச்சி' என்னும் மொழி பெயர்ப்பைப் பலரும் வழங்கி வருவதை நாம் பார்க்கின்றோம். "பரிணாம வரலாறு" என்று கூடச் சிலர் எழுதுகின்றார்கள். சிறிது சிறிதாக, படிப்படியாக, காலங்காலமாக ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சியை Evolution அல்லது பரிணாம வளர்ச்சி என்று கூறலாம். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக "குரங்கிலிருந்து பிறந்தவன்

மனிதன்" என்னும் டார்வின் என்பவரின் கொள் கையைக் குறிப்பிடலாம். படிப்படியாகவும், முறைப்படியாகவும் ஏற்பட்டு வருகின்ற வளர்ச் சியை அழகு தமிழில், "படிமுறை வளர்ச்சி" என்று பகர்ந்து பன்மடங்கு மகிழ்ச்சியைப் பெறலாமே!

Exception – புறனடை

இலக்கண நூல்களில் "புறனடை" என்னும் சொல் பயின்று வருவதை நாம் பார்த்திருக் கின்றோம். விதிக்கப்பட்டவற்றுள் அடங்காத வற்றை அமைத்துக் காட்டுவதுதான் "புறனடை". முன்னோர்கள் கண்டறிந்த இப்பொன்போன்ற "புறனடை" என்னும் சொல்லே Exception என்ப தாகும்.

Estate – நிலவளாகம்

தனிப்பட்ட ஒருவருக்கோ, கூட்டாகப் பலருக்கோ, அன்றி அரசுக்கோ உரிமையாக உள்ள, நீண்ட பெரும் நிலப்பரப்பை Estate என்று கூறுகின்றோம். Campus என்னும் சொல்லை "வளாகம்" என்று நாம் ஏற்கெனவே மொழி பெயர்த்துப் பயன்படுத்தி வருகின்றோம். எனவே விரிந்து பரந்த இந்நிலப் பகுதியை, "நிலவளாகம்" என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கலாமே!

Exhaust Fan - வெளியேற்று மின் விசிறி

அறைக்குள் இருக்கும் தீய காற்று, புகை முதலானவற்றை வெளியேற்றுவதற்கு Exhaust fan என்னும் கருவி பயன்படுகிறது. உள்ளிருக்கும் காற்று வெளியேறும் போது, அங்கே புதிதாக நல்ல காற்றுப் புகுந்து புழங்குவதற்கு நல்வாய்ப்பு ஏற்படுகின்றது. கெட்ட காற்றை வெளியேற்று வதன் வாயிலாக நல்ல காற்றை நமக்கு வழங்கு கின்ற மின் விசிறியை "வெளியேற்று மின்விசிறி" என்று விளம்பி மகிழ்ச்சி அடையலாமல்லவா?

Favouritism – காதன்மை

"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்"

என்று பேசுகிறார் பெருநாவலர்.

"காதன்மை என்றால் என்ன? இது காதலாந் தன்மை என்று விரியும். அன்புடைமை என்பது பொருள். "காதன்மை கந்தா" என்று வரும்போது, அன்புடைமை பற்றுக் கோடாக என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அறிய வேண்டியவற்றை அறியாதிருப்பவரை அன்புடைமை காரண மாகத் தேர்ந்தெடுத்துப் பொறுப்பில் அமர்த்தி விட்டால், அது நமக்கு அளவில்லாத துன்பத்தைக் கொடுக்கும். இப்போது நன்றாகப் புரிகின்றது, "காதன்மை" என்பது வேறொன்றும் இல்லை, அதுதான் Favouritism என்பதாகும்.

எந்தக் காலத்திலேயோ இந்தக் கருத்தினை எத்துணைத் துல்லியமாக விளக்கியுள்ளார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இந்த அரிய செய்தியை எனக்கு அருளிய பெரியவர் பெரும் பேராசிரியர் மு.ரா. பெருமாள் முதலியார் அவர்கள் ஆவார்கள்.

Fax – பாய்வு நகல்

Facsimile என்னும் சொல் Fax என்று சுருங்கியுள்ளது என்று அகராதி தெரிவிக்கின்றது. Facsimile என்னும் முழுப் பெயருக்கு உருவ நேர்படி என்பது உரிய விளக்கமாகும். ஆகவே நேர் நகல் என்பது நேர்த்தியாக இருக்குமல்லவா? ஆயினும் ஓரிடத்தில் ஒரு கருவியில் காட்டப் படுகின்ற செய்தி தொலைவிலுள்ள வேறொரு அதே போன்ற கருவியில் அப்படியே தெரிகிறது. ஆகையால் பாய்ந்து செல்லும் இந்த நகலைப் பாய்வு நகல் என்று கூறிப் பன்மடங்கு மகிழ்ச்சி யடையலாமல்லவா?

Fax Message – என்று வரும் போது "பாய்வுச் செய்தி" என்று பகர்ந்து பூரிப்படையலாமே?

Flame – தீக்கொழுந்து

எரியும் நெருப்பிலிருந்து நாக்குப் போல் நீண்டு மேலோங்குகின்ற தீப்பிழம்பை Flame என்று கூறுகின்றோம். இதற்குத் "தீக்கொழுந்து" என்னும் திருப்பெயரைச் சூட்டலாமல்லவா? இந்த நல்ல

மொழி பெயர்ப்பை நமக்கு வழங்கியுள்ள முனைவர் சுந்தரம் ஆவுடையப்பன் அவர்களை நாம் வாயார வாழ்த்தி மகிழலாமே.

Flexible Cable – துவள் வடம்

எளிதாக வளைக்கக்கூடிய கம்பி வடத்தை Flexible Cable என்று சொல்கிறோம். இவ்வாறு வளைக்கக்கூடிய கம்பி வடங்கள், நம் இல்லங்களில் உள்ள மின் கருவிகளுக்குப் பெரிதும் பயன் படுகின்றன. இதனைத் "துவள் வடம்" என்று, நம் தொன்மைத் தமிழில், அழகுற அமைத்து, அகம் மகிழலாமே.

Foot-Board – மிதிப்படி

பேருந்துகளில் ஏறுவதற்கு நமக்கு உதவியாக இருக்கிற சிறிய படிக்கட்டினை Foot Board என்று கூறுகின்றோம். உயரமான பேருந்துவில் ஏறு வதற்கு, ஏணி போன்ற ஏற்றம் தேவைப்படு கின்றதல்லவா? ஒரு "மிதிமிதித்து" மேலேறுவதற்கு வசதியாக இருக்கின்ற படிக்கட்டே Foot Board ஆகும். இதை "மிதிப்படி" என்று சொல்லிப் பார்த்தால், ஆங்கிலம் போலவே அருந்தமிழும் இனிப்பதைப் பார்க்கலாம்.

Freelance Writer – தன்னிலை எழுத்தாளர்

எந்த நிறுவனத்தையும் சார்ந்திராமல் தம் சொந்தக் காலிலே நின்று, தேவைப்படும்போது,

செய்தி நிறுவனங்களுக்கு உதவி வருகின்ற எழுத்தாளரை Freelance Writer என்று கூறுகின் றோம். இந்நிலையில், நாலடியாரில் வருகின்ற நறுந்தமிழ்ப் பாட்டு ஒன்றை நாம் நினைவு கூறலாம்:-

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும்–நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்"

சுதந்திரமாகச் செயல்படுபவர்தானே Freelance Writer. இவரைத் "தன்னிலை எழுத்தாளர்" என்று தடையின்றிக் கூறலாமே!

Frequency – நிகழ்வு இடைவெளி

பேருந்துகள் புறப்படும் நேரத்தை நாம் கணக்கிட்டு அறிகின்றோம். அவை 15 மணித் துளிகளுக்கொருமுறை, 20 மணித்துளிகளுக்கு ஒரு முறை, 30 மணித் துளிகளுக்கு ஒரு முறை என்னும் வீதத்தில் அமையக் கூடும். பேருந்துகள் புறப்படும் இம்முறை பற்றிப் பேசும் போது ஆங்கிலத்தில் ``Frequency" எவ்வாறு உள்ளது என்று கேட் பார்கள். இதைத் தமிழில் "நிகழ்வு இடைவெளி" என்று மகிழ்வாகக் கூறலாமல்லவா?

Furniture – அறைகலன்

நம் வீட்டிற்குள், நமக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்ள நாம்

விரும்புகின்றோம். இவற்றுள் முக்கியமானவை Furniture ஆகும். இதனைத் தட்டுமுட்டுப் பொருள் கள், மரச்சாமான்கள், மேசை நாற்காலி போன்ற பொருள்கள், வீட்டுத் தளவாடங்கள் என்றெல் லாம் சொல்லிப் பார்த்தோம். கடைசியில் பொருத்தமான ஒரு சொல்லை உருவாக்கி உவகை கொண்டோம். அறைக்கு அழகூட்டும் பொருள்கள் தாமே Furniture. அவற்றை "அறை கலன்" என்று சொல்வது அழகுக்கு அழகு செய்வதாகுமல்லவா?

Fuse Wire – உருகிக்கம்பி

மின்னோட்டப் பாதையில், முன்னெச்சரிக் கையின் பொருட்டு, கம்பி ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. மின்னோட்டம் அளவுக்கு மேல் அதிகரிக்கும் போது இந்தக் கம்பி, வெப்பத் தினால் உருகி, தொடர்பு விட்டுப் போகிறது. இதனை "உருகிக் கம்பி" என்று உரைத்து உள்ளம் மகிழலாமே.

Glare – கூசொளி

சீரான ஒளியையே நம் கண்கள் ஏற்றுக் கொள்கின்றன. அதிகமான ஒளி ஏற்பட்டு விட்டால் கண்கள் கூசுகின்றன என்று கூறுகின் றோம். ``Glare அடிப்பதால் தங்கள் முகத்தைச் சரி வரப் பார்க்க முடியவில்லை என்று சொல்வ

துண்டு. அவ்வாறாயின், Glare என்பது கூசொளி தானே!

Goodwill – வணிக நற்பெயர்

வாணிகம் செய்வோர், தங்களின் மூலதனம், சரக்குக் கையிருப்பு முதலியவற்றால் பெருமை பெறுகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள் தருகின்ற மகத்தான ஆதரவு காரணமாக, ஒரு வணிக நிறுவனத்திற்கு நல்ல பெயர் ஏற்படுகின்றது. இந்த நற்பெயரே Good will ஆகும். எனவே இதனை "வணிக நற்பெயர்" என வாயார வாழ்த்தி மகிழ்ச்சி கொள்ளலாமே.

Ground Support – தள ஆயத்தம்

வானூர்தி நிலையத்திலிருந்து வானூர்தி புறப்படுவதற்கு முன்னர், ஆயத்தப் பணிகள் பலவற்றைச் செய்து முடித்தாக வேண்டும். இதற்குரிய வானூர்தி நிலையப் பணியாளர் இவற்றைக் கவனமாகச் செய்து முடித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதை, ஆங்கிலத்தில், Ground Support என்று கூறுவார்கள். இதனைத் தள ஆயத்தம்" என்று தனித் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழின்பம் பெறலாமே.

Guardian – முதுகண்

Guardian என்னும் சொல்லுக்கு "காப்புப் பொறுப்பாளர்," "முதிரா அகவையர் காப்பாளர்"

என்னும் மொழிபெயர்ப்புகள் இப்போது வழங்கி வருகின்றன. இந்தப் பொருளுக்கு, Guardian என்னும் பெயருக்கு, திருவானைக்கா கல்வெட்டில் "முதுகண்" என்னும் சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. இளைய கண்ணுக்குப் பாதுகாப்பாக இருப்பது "முதிய கண்" அல்லவா? எனவே, சுருக்கமும் பொருட் சிறப்பும் பொருந்திய "முதுகண்ணிற்கு" நாம் வாழ்த்துக்கூறி வரவேற்று மகிழலாமே!

Hobby – விழைவு வினை (விழைவம்)

உற்ற நண்பர்கள் உரையாடி மகிழும் போது "உன்னுடைய Hobby என்ன?" என்று கேட்பது வழக்கம். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், நம் மனத்திற்கு மகிழ்வூட்டும் ஒரு பணியில் நாம் ஈடுபடுகின்றோம். எடுத்துக் காட்டாகத் தோட்ட வேலை, பன்னாட்டு அஞ்சல் வில்லைகளைத் தொகுத்து வைப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம். நமக்கு நாமே தேர்ந்தெடுத்துக் கொண்டு, நம்மை மறந்து மகிழ்ச்சியாகச் செயல்படுகின்ற, இத்தகைய நல்ல பணியை "விழைவு வினை" என்று கூறி, மகிழ்வு கொள்ளலாமல்லவா? காலப் போக்கில் "விழைவம்" என்று இது சுருங்குதல் கூடுமே!

Hotline Telephone – நேரியங்குத் தொலைபேசி

நேரடித் தொலை பேசியில் பேசும்போது, எண்களைச் சுழற்றிவிட்டுப் பதில் கிடைத்தவுடன்

பேசுகின்றோம். ஆனால் Hotline Telephone-ஐ பயன்படுத்தும் போது, எண்களைச் சுழற்றும் வேலையில்லை. தொலை பேசியை எடுத்த உடனேயே மறுபுறத்தில் மணியடிக்கும். உடனடித் தொடர்பு கிடைத்துவிடும். இரண்டு பெரியவர் களுக்கிடையே அல்லது இரண்டு பெரிய நிறுவனங்களுக்கிடையே ஏற்பாடு செய்யப் பெறும் மிகச் சிறந்த வசதியாகும் இது. தடங்கலில்லாத தொடர்பு கிடைப்பதால், இதனை "நேரியங்குத் தொலைபேசி" என்று சீரியலாய்ச் செப்பி மகிழலாமே!

House Surgeon – மனைமருத்துவர்

"மருத்துவமனை" என்பது ஒரு பெரிய நிறுவனம். ஆகவே, அதுபல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பிரிவுகளை "வார்டு" என்று கூறுகின்றோம். ஒவ்வொரு மருத்துவ மனை வார்டிற்கும் ஒவ்வொரு மருத்துவர் பொறுப் பேற்றுப் பணிபுரிகின்றார். இவரை House Surgeon என்னும் அழகான பெயரால் அழைத்து மகிழ்கின்றோம். தமிழில் இவரை இதே முறையில் "மனை மருத்துவர்" என்னும் அழகிய பெயரால் அழைத்து மகிழலா மல்லவா?

Humidity – ஈரச்செறிவு

மழைக்காலங்களிலும் பனிக் காலங்களிலும் "இன்று ஈரப்பதம் எவ்வாறு இருக்கிறது" என்று

கேட்பார்கள். காற்றில் கலந்துள்ள ஈரத் தன்மையின் அளவே Humidity என்று கூறப் படுகிறது. இதனை "ஈரச் செறிவு" என்று இனிய தமிழில் கூறலாமல்லவா?

Illumination – ஒளிவிளக்கு ஒப்பனை

சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் போது Illumination என்னும் சொல்லை நாம் பயன் படுத்துகிறோம். விழாக் காலங்களில் ஊரகப் பகுதிகளையும், கட்டடங்களையும் ஒளிமிக்க விளக்குகளாலும் வண்ண விளக்குகளாலும் அலங்காரம் செய்வது வழக்கமாக இருக்கிறது. இத்தகைய ஒளி அலங்கார வகையே Illumination எனப்படும். இதனை மோனை நயத்துடன், "ஒளிவிளக்கு ஒப்பனை" என்று கூறி மகிழலாமே.

Image – புகழுரு

Image என்னும் சொல்லின் இயல்பான பொருள் "உருவம்" என்பதாகும். ஆயினும், ஒரு நிறுவனத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, இதன் பொருள் வேறுபடுகின்றது. The Image of the college should be kept up என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். "கல்லூரியின் புகழுருவம் காக்கப் பட வேண்டும்" என்று இதனை மொழி பெயர்க்க லாம். ஈண்டு, "கல்லூரியின் புகழுருவம்" என்னும் பொருள், கனிந்து வந்துள்ளது. அவ்வாறாயின், Image என்பது "புகழுருவம்" தானே.

Immunity – ஏமம்

Immunity என்பதைச் "சட்ட விலக்களிப்பு" என்று மொழிபெயர்க்கின்றோம். "நோய்த் தடைக்காப்பு" என்னும் மொழி பெயர்ப்பும் இருக்கின்றது. "தீங்கு நேராத் தடைக்காப்பே" Immunity என்று கொள்ளப்படும். தொல்காப்பிய நூற்பா ஒன்று இப்போது நம் நினைவிற்கு ஓடிவரும்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

"ஏமஞ்சான்ற மக்கள்" யார்? அவர்கள் தாம் "பாதுகாப்பைத் தருகின்ற குழந்தைச் செல் வங்கள்," Immunity என்பதை "ஏமம்" என்று இயம்பி இன்புறலாமே.

Inclination – இயல்பு மனப்போக்கு

மனத்தின் இயல்பான ஒரு விருப்பத்தை அல்லது இயல்பான ஒரு போக்கினை Inclination என்று கூறுகின்றோம். அவ்வாறாயின் இதனை, அழகு தமிழில், "இயல்பு மனப்போக்கு" என்று இயம்பி இன்புறலாமே! இந்த அரிய மொழி பெயர்ப்பினை வழங்கிச் சிறப்பித்த பல்கலைச் செல்வர் பேராசிரியர் பா. மாணிக்கவேலு அவர் களை நாம் என்றும் வாழ்த்தி இன்புறலாமே!

Indisposition – நலக்குறைவு

பெரிய பதவிகளில் இருப்பவர்கள், சில சமயங்களில் ஏற்றுக் கொள்ளப்பெற்ற கூட்டங்களுக்கு வர இயலாமற் போவதுண்டு. அப்போது Indisposed என்னும் சொல்லைப் பயன்படுத்துவார்கள். “சிறிதளவு உடல் நலம் குன்றியிருக்கின்றார்” என்பது தான் அதற்குரிய பொருள். எனவே நாம் இதனை “நலக்குறைவு” என்று நயம்பட உரைத்து மகிழலாமே!

Innocence – ஏதுமறியாமை

Ignorance என்னும் சொல்லிற்கும் Innocence என்னும் சொல்லிற்கும் நுட்பமான வேறுபாடு இருக்கின்றது. கல்வியறிவில்லாதவரை, கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தேறாதவரை Ignorant person என்று கூறுகின்றோம். இந்த வகையினராக இருப்பவர் தான் Innocent person. ஒரு குற்றம் நடந்துவிடுகிறது. அந்தக் குற்றத்தைப் பற்றி அவருக்கு அறவே தெரியாது. அப்படிப் பட்டவரை ``Innocent person" என்று சொல்கிறோம். எந்தத் தொடர்பும் இல்லாதிருக்கின்ற இத்தகையோரை “அப்பாவி மக்கள்” என்று சொல்வதும் உண்டு. ஏதும் அறியாத இந்நிலையை “ஏதும் அறியாமை” என்று குறிப்பிடலாமல்லவா? எனவே ``Innocence" என்னும் ஆங்கிலச் சொல்

"ஏதுமறியாமை" என்னும் எழிலார்ந்த மொழி பெயர்ப்பைப் பெற்று நம்மை வியக்கச் செய்கிறது.

Instructions – அறிவுறுத்தங்கள்

அரசு வெளியிடும் உத்தரவுகளை "ஆணைகள்" என்று கூறுகின்றோம். இவை பல வகைப்படும். இவையன்றி, ``Instruction" என்னும் முறையிலும் உத்தரவுகள் தெரிவிக்கப்படும். இவை நிலைமைக்கேற்ப, ஆணைகளாகவும் கருதப்படும். செய்தித் தொகுப்புகளாகவும் அமையும். இவற்றை "அறிவுரைகள்" என்று சொல்வதை விட, "அறிவுறுத்தங்கள்" என்று கூறின், கருத்துப் பொலிவு கனிவுறத் தோன்றுமன்றோ?

Insulation - மின்காப்பு

மின்சாரத் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக, மின் கம்பிக்குச் செய்யப்படும் காப்பு முறையை Insulation என்று குறிப்பிடுகின்றோம். மின் கம்பிக்குச் செய்யப் படுகின்ற பாதுகாப்பினை "மின்காப்பு" என்று சுருக்கிச் சொல்லலா மல்லவா?

Interior Decoration – மனையக ஒப்பனை

வீட்டைக் கட்டி முடித்து விட்டால் போதாது. அதனை அழகுபடுத்தவும் வேண்டும். புற அழகு மட்டுமல்லாமல், அக அழகும் மிகவும் தேவை யாகும். வீட்டிற்குள்ளே பல்வேறு ஒப்பனை

களைச் செய்து, அதற்கு எழிலூட்டுவார்கள். இதற்கு ஆங்கிலத்தில், Interior decoration என்று பெயர். இதனை அழகு தமிழில் "மனையக ஒப்பனை" என்று மாண்புடன் கூறி மகிழ்ச்சி யடையலாமே?

Jockey – உயர்த்து கருவி

பயணம் செய்து கொண்டிருக்கும் போது, சீருந்து நின்று விடுகிறது. இறங்கிப் பார்க்கையில், சக்கரத்தில் துளைப்பு (puncture) ஏற்பட்டிருக் கிறது. ``Jockey" என்னும் கருவியைப் பயன் படுத்திச் சீருந்தினைச் சற்றே உயர்த்திச் சக்க ரத்தை மாற்றுகிறோம். தக்க நேரத்தில் உதவுகின்ற இந்த jockey என்னும் கருவியை "உயர்த்து கருவி" என்று உரைத்து மகிழலாமே!

Juice centre – கனிச்சாறு கடை

Juice centre என்பதை நேரடியாக மொழி பெயர்த்தால் "பழரசமையம்" என்று சொல்லத் தோன்றும். "மையம்" என்னும் சொல் "நிலையம்" என்னும் பொருளில் ஈண்டு ஆளப்பட்டுள்ளது. ஆயினும் "கடை" என்று குறிப்பதற்கும் தடை யில்லையல்லவா? எனவே, களிப்பூட்டும் வகை யில், இதனைக் "கனிச்சாறு கடை" என்று கன்னல் தமிழில் சொல்லி மின்னச் செய்யலாமே!

Jumper – கட்டட வெட்டுளி

கடினமான சுவரில் துளை இடுவதற்கு வசதியாக, வெட்டுளியைப் பயன்படுத்துகிறோம். இதை ஆங்கிலத்தில் Jumper என்று குறிப்பிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இதனைக் "கட்டட வெட்டுளி" என்று சொல்லிப் பார்த்தால், கன்னல் தமிழின் பெருமை தெற்றென விளங்கும்.

Junior – இளவர்

Senior என்னும் சொல்லை "முதுவர்" என்று பொருத்தமுற மொழி பெயர்த்துள்ளோம். ``Junior" என்னும் சொல்லை எவ்வாறு மொழி பெயர்ப்பது என்னும் வினா இப்போது எழுமல்லவா? மூத்தவர், இளையவர் என்று சொல்லும் வழக்கம் இருந்து வருகின்றது. இளைய வரை "இளவல்" என்றும் குறிப்பிடுகின்றோம். "இளவல்" தம்பியாகிறார். அவ்வாறாயின் ``junior"ரை "இளவர்" என்னும் புதிய சொல்லால் போற்றி மகிழலாமே.

Land Mark – நிலவரை

Land Mark என்னும் கூட்டுச்சொல், நிலத்தின் எல்லையைச் சுட்டுகின்ற ஒரு கல்லாகவோ வேறு பொருளாகவோ அமையும். இதை, "நில எல்லைக்குறி" என்று, மொழி பெயர்ப்பதைப் பார்க்கின்றோம். வான் புகழ் வள்ளுவர் அரிய செய்தி யொன்றை நமக்கு அருளுகின்றார்.

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு"

என்று கூறுகின்றார் அவர். இந்த நிலவுலகத் தையே ஓர் எல்லையாகக் காட்டுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. Land Mark என்பதற்கு, "நிலவரை" என்பது எத்துணை அருமையாகப் பொருந்துகிறது என்பதை எண்ணி இன்புற லாமே!

Lapse – இழுக்கம்

Lapse என்னும் ஆங்கிலச்சொல் அலுவலகங் களில் அடிக்கடி பேசப்படும் ஒரு சொல்லாகும். "கடமை தவறுதல்" என்று இதற்குப் பொதுவாகப் பொருள் கூறலாம். ஆங்கிலத்தில் அமைந் துள்ளதைப் போலவே, சுருக்கமாக, ஒரே சொல் லாகத் தமிழில் அமைக்க முடியுமா என்று கேட்கத் தோன்றும்.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

ஒழுக்கம் என்னும் சொல்லுக்கு எதிர்ப்பதம் இழுக்கம் என்று காட்டுகின்றார் வான் புகழ் வள்ளுவர். Lapse என்னும் சொல்லோடு "இழுக்கம்" என்னும் சொல் இணைந்து நடை போடுவதை நாம் பார்த்து மகிழலாமே.

Law – நாட்டுச்சட்டம்

ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டு மக்களின் ஒழுகலாற்றை முறைப்படுத்துகின்ற விதிகளை Law என்று கூறுகின்றோம். Law of the land என்று சொல்லுகின்ற வழக்கமும் இருந்து வருகின்றது. அவ்வாறாயின், Law என்பதை "நாட்டுச் சட்டம்" என்று நவின்று நனி மகிழ்ச்சியடையலாமே!

Legislation – படைப்புச்சட்டம்

சட்டமியற்ற வேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டு, அதனை உருவாக்கிப் பின்னர் அதனை நிறைவேற்றும் தொடர் செயலுக்குப் பொதுவாக Legislation என்னும் பெயர் வழங்கி வருகின்றது. இச்செயல், படைப்புச் செயலாக அமைவதால், இதனைப் "படைப்புச் சட்டம்" என்று பாங்குடன் பகரலாமே!

Level ground – தன்தரை

Level ground என்று சொன்ன மாத்திரத்திலேயே "சமதரை" என்று சமத்தாகச் சொல்லி விடுவோம். ஆனால், நாட்டுப்புறங்களில், இதற்கு நல்ல தமிழ்ச் சொல் ஒன்று புழங்கி வருகின்றது. மேடு பள்ளமில்லாமல் சமமாக விளங்கும் தரைக்குத் "தன் தரை" என்னும் அழகிய சொல்லை நம் முன்னோர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். தனிச்சுவையுடைய இச்சொல்லை

நாமும் பயன்படுத்தித் தனிப் பேரின்பம் பெற லாமே!

Living Legend– மண்டு புகழ் மாமனிதர்

மிகப்பெரிய நிலையில், புகழ் பூத்து, வாழ்ந்து வருகின்ற ஒருவரைப் பற்றித் தெரிவிக்கும் போது, He is a living legend என்று கூறுவார்கள். Legend என்றால் "புராணக் கதை" என்பது நமக்குத் தெரியும். அந்தப் பொருள் இங்குப் பொருந்தாது என்பதை நாம் அறிந்து கொள்கின்றோம். அவ்வாறாயின், சரியான விளக்கம் என்ன? குறிப்பிட்ட ஒரு துறையில், புகழின் உச்சியில் வாழ்ந்து வருபவர்தான் Living Legend "புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு" என்று பாடினாரல்லவா பாரதியார். அதனை இப்போது நினைவு கூர்தல் வேண்டும். நினைவு கூரவே, மொழிபெயர்ப்பு முந்திக்கொண்டு ஓடி வந்து விடும். Living Legend என்பவர் வேறு யாரு மில்லை. அவர்தான் "மண்டு புகழ் மாமனிதர்". இதனைச் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சியடைய லாமே!

Location – அமைவிடம்

பொது மக்களின் நலனுக்காகக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அப்போது அதை எங்கே அமைக்க லாம் என்று பேசுவார்கள். Location பற்றி முதலில்

முடிவு செய்யவேண்டும் என்று கூறுவதுண்டு. கட்டடம் அமைக்கப்பட வேண்டிய இடந்தான் Location ஆகும். இதை அழகு தமிழில் “அமைவிடம்” என்று குறிக்கலாமல்லவா?

Magic – செப்படி வித்தை

குழந்தைச் செல்வங்களுக்கு Magic என்றால் மிகவும் விருப்பம். இதனைக் “கண்கட்டு வித்தை” என்று சொல்வதுண்டு. நம்ப முடியாத செய்தி களை நம்புமாறு காட்டுவது இந்தக் கலையின் சிறப்பாகும். இதனை, நாட்டுப் புறங்களில் “செப்படி வித்தை” என்று செப்பி மகிழ்வார்கள். நமக்குக் கிடைத்த நறுந்தமிழ்ச் செல்வமாக, நாமும் இதனை ஏற்றுக் கொள்ளலாமே.

Maiden Attempt – கன்னி முயற்சி

ஒருவர் முதன் முறையாக மேடையில் பேசுகிறார். அதனை Maiden attempt என்று கூறு கின்றோம். இதற்குரிய மொழிபெயர்ப்பாக “முதல் முயற்சி” என்று தான் அமைக்க வேண்டுமென்று சிலர் வாதாடுவார்கள். ஏனென்றால் Maiden என்னும் சொல்லுக்குக் “கன்னிப் பெண்” என்று பொருள் இருக்கிறதல்லவா? அதைச் சுட்டிக் காட்டுவார்கள். “கன்னி முயற்சி” என்று எழுதக் கூடாதென்று கண்டிப்பார்கள். ஆயினும், கம்ப ராமாயணத்தில், “காகுத்தன் கன்னிப் போர்” என்று வருகிறது. ஆகையால், “கன்னிப் பேச்சு”,

"கன்னி முயற்சி" என்றெல்லாம் எழுதுவதில் எந்தத் தவறும் இல்லையல்லவா? கன்னியரும் இதை வரவேற்பார்களே!

Mailing List – அஞ்ச லனுப்புகைப் பட்டியல்

ஒவ்வோர் அலுவலகத்திலும், குறிப்பாக ஒவ்வோர் இதழ் வெளியீட்டு நிறுவனத்திலும் Mailing List என்னும் ஒரு பட்டியலை ஆயத்தம் செய்து, கைவசம் வைத்திருப்பார்கள். யார் யாருக்கு அஞ்சல் அனுப்பப்பட வேண்டும், அச்சிட்ட இதழ்கள் யார் யாருக்குச் சென்று சேர வேண்டும், என்பதற்காக வைத்திருக்கப் பெறு கின்ற பட்டியலாகும் இது. இதனை "அஞ்ச லனுப்புகைப் பட்டியல்" என்று அழகு தமிழில் கூறி மகிழலாமே.

Main Road – தலைமைச் சாலை

Main Road என்னும் பெயருக்கு ஈடாக, சில குடியிருப்புகளில், "மெயின் சாலை" என்று எழுதி வைத்துள்ளனர். வேறு சில இடங்களில், "பிரதான சாலை" என்று எழுதியுள்ளனர். இந்தப் பெயருக்கு அருமையான தமிழ்ப் பெயரை நாம் காணமுடியும். Main file என்று வரும்போது "தலைக்கோப்பு" என்று மொழி பெயர்க் கின்றோம். Main Gate என்பதைத் "தலை வாயில்" என்று வழங்குகின்றோம். இதே போன்று Main

Road என்பதைத் "தலைமைச் சாலை" என்று கூறி உள்ளம் தழைக்கலாமல்லவா?

Malice – காழ்ப்புணர்ச்சி

பிறருக்குத் தீங்கு செய்ய விரும்பும் எண்ணத்தை Malice என்கிறோம். இதனைத் தமிழில் "வன்மம்" என்று இப்போது கூறி வருகின்றோம். வெறுப்பு காரணமாக ஏற்படும் மனக் காழ்ப்பினை Malice என்று கூறுவது பொருத்தமாக இருக்குமல்லவா? அவ்வாறாயின் "காழ்ப்புணர்ச்சி" என்னும் கனிவுப் பெயரைச் சொல்லிக் களிப்படையலாமே!

Manners – பழகும் பாங்கு

ஒருவர், மற்றவர்களோடு, பழகுகின்ற முறையை Manners என்று ஆங்கிலத்தில் கூறுகின் றோம். ஒவ்வொருவரும், தமக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த வகையில், பழகுவார்கள். இதனை, அழகு தமிழில், "பழகும் பாங்கு" என்று பகரலா மல்லவா?

Matriculation School – பதின்நிலைப் பள்ளி

High School என்பதற்கு "உயர்நிலைப் பள்ளி" என்னும் பெயர் மிகவும் பழகிவிட்டது. அதே போன்று Higher Secondary School என்பதற்கும் "மேனிலைப் பள்ளி" என்று மெருகேற்றப்பட்டு விட்டது. ஆயினும் Matriculation School

என்பதற்குச் சரியான பெயர் அமையவில்லையே என்று சிலர் எண்ணக் கூடும். மாணவர்களைக் கல்லூரிப் படிப்பிற்கு ஆயத்தம் செய்யும் பள்ளியே Matriculation பள்ளியாகும். பத்தாம் வகுப்புவரைக் கல்வியைப் புகட்டும் இப்பள்ளியைப் "பதின்நிலைப் பள்ளி" என்று பாங்குற மொழியலாமல்லவா?

Mechanic – எந்திரர்

எந்திரங்களைப் பழுது பார்ப்பவரை Mechanic என்று கூறுகின்றோம். Machine என்னும் சொல்லின் அடிப்படையாக Mechanic என்னும் சொல் தோன்றியுள்ளது. Mechanic என்பவரை "எந்திர வினைஞர்" என்னும் எழிற் பெயரால் அமைக்கலாம். ஆயினும் ஆங்கிலத்தில் ஒரே சொல்லாக இருப்பதைப் போல, தமிழிலும் ஒரே சொல்லாக அமைய வேண்டுமென்று சிலர் வாதாடுவர். "எந்திரர்" என்று எடுத்துச் சொல்லி, அத்தகையோரையும் அகம் மகிழச் செய்யலாமே!

Mega-City – மாப் பெரு நகர்

ஒரு பெரிய மாநகரத்தில் அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்ட பகுதியை Mega-city என்று சொல்லலாம். அதே போன்று பல மாநகரங்களை உள்ளடக்கிய ஒரு பெரிய பகுதியும் இந்தப் பெயரால் அழைப்பது உண்டு.

எனவே Mega-city என்பதை மாப்பெரு நகர் என்று மகிழ்ச்சியுடன் கூறலாமல்லவா?

Memento – நினைவுப் பரிசு

பெரியோர் வருகை நம்மைப் பேரின்பத்தில் ஆழ்த்துகின்றது. நிகழ்ச்சியை நினைவுகூறும் வகையில் பரிசொன்றினைப் பாங்குடன் வழங்கு கின்றோம். இதனை "நினைவுப் பரிசு" என்று எடுத்துக்கூறி மனநிறைவு பெறலாமே!

Mental Agony – மன உளைச்சல்

Mental Agony என்னும் சொற்கள் ஆங்கிலத் தில் ஓர் அழகிய செறிவுத் தொடராக அமைந்து கிடக்கின்றது. இந்தத் தொடரின் இனிய ஒலியை அழகு குன்றாமல், தமிழிலும் வடித்துக் கொடுக்க வேண்டுமல்லவா. உளைச்சல், மன உளைச்சல் என்னும் சொற்களைச் சிலர் அடிக்கடி பயன் படுத்துவதைப் பார்க்கின்றோம். உளைச்சல் என்னும் சொல்லுக்குத் தாங்க முடியாத அல்லது பொறுக்கமுடியாத வலி எனப் பொருள் கொள்ள லாம். இவ்வாறே மன உளைச்சல் என்னும் தொடரைத் தாங்கொண்ணாத மனத் துன்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தலாம். எனவே, Mental Agony என்னும் தொடரை, "மன உளைச்சல்" என்று உரைத்து உள்ளம் தெளியலாமே!

Mentor – நல் ஆசான்

Mentor என்னும் சொல் செய்தித் தாள்களில் அடிக்கடி காணப்படுகிற ஒரு சொல்லாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு Mentor இருப்பார். இவரைக் 'குலகுரு' என்று கூடச் சொல்லலாம். இதே போன்று ஒவ்வொரு அரசியல் தலைவருக்கும் ஒரு Mentor —இருப்பார். இவரை, "வழிகாட்டி" என்று சொல்லலாம். Mentor என்னும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான பொருள் காண்போமாயின், அது நம்பிக்கையான ஆசிரியர் அல்லது ஆய்ந்துரைஞர் என்று அமையும். எனவே Mentor என்பவர் ஓர் ஆசிரியராகவும், ஒரு வழிகாட்டியாகவும் அமைகின்றார். நன்னெறி, நல்வழி போன்ற இலக்கிய நூல்களை நாம் நன்கு அறிவோம். இந்நிலையில் இந்நூல்களின் பெயர்களை எண்ணிப் பார்த்தால், "நல்லாசான்" என்னும் இனிய மொழி பெயர்ப்பு இனிது ஓடி வரும். நல்லாசிரியர் போன்று நமக்கு வழிகாட்டும் இவர்களை "நல் ஆசான்" என்று நவின்று நலம் பெறலாமே! இந்த அழகிய சொல்லாக்கத்தை எனக்கு எடுத்துக்கூறிய அருமை நண்பர் திருக்குறள் மாமணி கவிஞர் மா. வழித் துணைவன் அவர்களை மனமாரப் பாராட்டு கிறேன்.

Mesmerism – முகமாற்று

வசியக் கலையை நாம் Mesmerism என்று வழங்குகின்றோம். "மனித வசியம்" என்று மறை மலையடிகள் குறிப்பிடுகின்றார். மனத்தை மயக்கிப் பொருளைப் பறித்துச் செல்லுதல் நடை முறையில் காணப்பெறும் தீய செயலாகும். மனித வசியத்தை "முக மாற்று" என்று கிராம மக்கள் பேசுகின்றனர். நாமும் அவர்களுடன் சேர்ந்து, நல்ல தமிழை நாடெங்கும் பரப்பலாமே.

Mess – அடிசிலகம்

Hotel என்னும் சொல்லை "உணவகம்" என்று மொழி பெயர்த்துள்ளோம். இது நன்கு நிலை பெற்றுவிட்டது. நண்பர்களை நாம் வினவும் போது, "நான் Mess இல் சாப்பிடுகிறேன்" என்று விடை தருகின்றனர். இத்தகைய சாப்பாட்டுக் கூடங்களில், குறிப்பிட்டவர்கள், குறிப்பிட்ட எண்ணிக்கையில் உணவு வசதியைப் பெறு கின்றனர். ஈண்டு, கட்டணமும் குறைவாக இருக்கும். சாப்பாடும் வீட்டுச் சாப்பாட்டைப் போலவே சுவையாக இருக்கும். 'அடுதல்' எனும் சொல்லுக்குச் "சமைத்தல்" எனும் பொருள் இருக்கின்றதல்லவா? கூட்டாகச் சமைத்து உண்ணும் இடந்தானே mess. அவ்வாறாயின், "அடிசிலகம்" என்னும் அழகுபெயரை அமைத்து அகம் மிக மகிழலாமே!

Metal Detector – உலோக உணர்வி

யாருக்கும் தெரியாமல், யாரேனும் ஒருவர், உலோகக் கருவி ஒன்றினை மறைத்து வைத் திருக்கும் போது, அதனைக் கண்டு பிடிக்க உதவுகின்ற கருவியே Metal Detector என்பதாகும். கட்புலனாகாத உலோகத்தை உய்த்துணரும் ஆற்றல் பெற்ற கருவியை "உலோக உணர்வி" என்று உயர்த்திக் கூறலாமல்லவா!

Millennium – நல்லாயிரம்

Millennium என்னும் சொல் இன்று நம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இந்தச் சொல்லுக்கு இரண்டு முக்கியமான பொருள்கள் இருக்கின்றன. "ஆயிரம் ஆண்டுகள்" என்பது ஒரு பொருள். "நலம் பொங்குகின்ற நற்காலம் அல்லது மனித மாண்புகள் நிறைந்த பொற்காலம்" என்பது இன்னொரு பொருள். இவ்விரண்டு பொருள் களையும் இணைத்துப் பார்க்கும் போது "நல்லாயிரம்" என்னும் அரிய சொல்லாக்கம் எளிதில் ஓடி வருகின்றது. தொள்ளாயிரம் "நாலா யிரம்" "பல்லாயிரம்" என்னும் சொற்களைப் போலவே "நல்லாயிரம்" என்னும் சொல் நயம் மிக்க சொல்லாக அமையுமன்றோ? இது New Millennium என்று வரும் போது "புதிய நல்லாயிரம்" என்று பொலிவு பெறுமே!

Mood – மனவோட்டம்

மனம் என்னும் குரங்கு சில வேளைகளில் உறங்கிப் போகும்; சில வேளைகளில் சுறுசுறுப்பாகச் செயல்படும். ``mood இருந்தால் தான், நான் கவிதை எழுதுவேன்'' என்று சிலர் சொல்வார்கள். நன்மை பயக்கும் மன நிலையே mood ஆகும். மனவோட்டம் நன்றாக இருந்தால், விறு விறுப்பாகச் செயல்படலாம். அவ்வாறாயின், Mood என்பது "மனவோட்டம்" தானே.

Motel – உந்துணவகம்

Hotel என்னும் சொல் நமக்கு நன்கு தெரிந்த சொல்லாகும். இதனை 'உணவகம்' என்று உரைத்து மகிழ்கின்றோம். ஆனால், Motel என்னும் சொல்லோ நமக்குச் சற்றுப் புதுமை யாகத் தோன்றுகிறது. Motorist Hotel என்பது Motel என்று சுருங்கி இருப்பதாகச் சொல்கின் றார்கள். இதனை,"உந்துலாவினர் உணவகம்" என்று நாம் குறிப்பிடலாம். Hotel என்னும் சொல்லில் H என்னும் எழுத்து மறைந்து அந்த இடத்தில் M என்னும் எழுத்து தோன்றி Motel என்று ஆகியுள்ளது. இதே போன்று நாமும் "உந்து லாவினர் உணவகம்" என்பதை "உந்துணவகம்" என்று சுருக்கிச் சொல்லிச் சுவைக்கலாமே!

Moving space – நடவை

அலுவலகத்திலும் நம் இல்லத்திலும், நாம் புழங்குவதற்கு இடமில்லாமல், மேசை-நாற்காலி போன்ற பொருள்களையும் பிற பொருள் களையும் நிறைத்து வைத்து விடுகின்றோம். பின்னர், எளிதாக நடப்பதற்கு இடமில்லாமல் அல்லற்படுகின்றோம். Moving space இல்லையே என்று மனம் வருந்துகின்றோம். முத்தமிழ்த் துறைபோகிய வித்தகர் மறைமலையடிகளார் இந்த ஆங்கிலத் தொடருக்கு ஈடாக "நடவை" என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். இனிமை பயக்கும் இந்த நற்றமிழ்ச் சொல்லை நாமும் பயன்படுத்தி நலம் பெறலாமல்லவா?

Mud Guard – மட்காப்பு

மிதிவண்டி போன்ற ஊர்திகள் ஓடும்போது, சேற்றையும், மண்ணையும் சேர்த்துவீசி, விரைந்து செல்கின்றன. ஓட்டுநர் மீதும், ஏனையோர் மீதும் மண்படியாமல் பாதுகாக்க, சக்கரத்தின் மேல் பகுதியில் வளைவான தகடு அமைக்கப் பட்டுள்ளது. மண்படாமல் பாதுகாக்கும் கருவியை Mud Guard என்று ஆங்கிலத்தில் கூறு கின்றார்கள். நாமும் நம்முடைய அழகு தமிழில் "மட்காப்பு" (மண்காப்பு) என்று கூறலாமல்லவா!

Numerology – எண்கணியம்

மனித வாழ்க்கைக்கு மாண்புகள் சேர்க்கும் ஒரு கலையாக Numerology வளர்ந்து வருகின்றது. கோள்களுக்கும் பெயர்களுக்கும் எண்கள் குறிக்கப்பெற்று, அவ்வெண்களின் அடிப்படையில் நன்மை தீமைகள் கணிக்கப் பெறுகின்றன. தீமைகளுக்குரிய தீர்திறங்களையும் இக்கலை வகுத்துக் கூறுகின்றது. வருங்காலத்தைக் கணித்துக் கூறும் வாய்ப்புடைய இக்கலைக்கு, "எண்கணியம்" என்னும் எழிற்பெயரைச் சூட்டி மகிழலாமல்லவா?

Obligation – கடப்பாடு

Duty என்னும் சொல்லைக் "கடமை" என்று கனிவுறக் கூறுகின்றோம். அவ்வாறாயின் obligation என்னும் சொல்லைக் "கடமைப் பொறுப்பு" என்று விளக்கிக் கூறலாமல்லவா? மழையின் மாண்பினை எடுத்துக்கூறும் போது, கைம்மாறு வேண்டாத கடப்பாட்டினை யுடையது "மாரி" என்று கவினுறப் படம் பிடிக்கிறார் வான்புகழ் வள்ளுவர்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு"

என்பது அவருடைய அருள் வாக்காகும். "கடப் பாடு" என்பது தானே obligation. வளமார்

தமிழுக்கு வாழ்த்துக் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

Omission – செய்தக்க செய்யாமை

இது ஒரு சட்டச் சொல்லாகும். செய்ய வேண்டிய செயலைச் செய்ய வேண்டிய நேரத்தில், செய்யாது விட்டு விட்டால், அது ஒரு குற்றமாகும்.

> "செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்"

என்று வள்ளுவர் வழிகாட்டுகிறார். "செய்தக்க செய்யாமை"யே Omission ஆகும். வான்புகழ் வள்ளுவர் வழங்கும் இவ்விளக்கத்தை வாழ்த்தி வரவேற்போம்.

Opportunity – செவ்வி

Opportunity என்று சொன்னவுடனேயே, "வாய்ப்பு" என்று கூறிவிடுவோம். நல்வாய்ப்பு என்றும் நவில்வோம். இந்தச் சொல்லுக்கு இன்னுமொரு நல்ல பொருள் இருக்கிறது. அது தான் "தக்க சமயம்" அல்லது "பொருத்தமான நேரம்" என்பதாகும். opportune Moment என்று சொல்லிப் பார்த்தால், முழுமையான பொருள் விளங்கிவிடும். "செவ்வி" என்னும் செந்தமிழின் இலக்கியச் சொல் நம்மை இனிமையாகக் கவ்விக் கொள்ளும்.

Ophthalmic ward – கண்ணியல் பகுதி

“கண்ணிற் சிறந்த உறுப்பில்லை” என்பது ஆன்றோர் வாக்கு. கண்ணின் அமைப்பு, செயற் பாடுகள், நோய்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் மருத்துவக் கலைக்கு Ophthalmology என்று பெயர். இதனைக் “கண்ணியல்” என்று கருத்துச் செறிவாக மொழி பெயர்க்கலாம் அவ்வாறாயின், Ophthalmic ward என்பது “கண்ணியல் பகுதி” தானே?

Optimism - ஆர்வமனப்பான்மை

எதிர்பார்த்த ஒன்று உறுதியாகக் கிடைக்கும் என்னும் மகிழ்ச்சியான எண்ணத்தை Optimism என்று கூறலாம். நம்பிக்கையான மனநிலை அல்லது தன்னம்பிக்கை யூட்டும் சூழ்நிலை என்னும் இவை யனைத்தையும் குறிக்கும் வகையில் “ஆர்வ மனப்பான்மை” என்று அமைக்கலாமல்லவா?

Outright sale – அறவிலை

நிலவிற்பனை செய்யப் பெறுகின்ற போது, அது hire purchase என்றும், outright sale என்றும் இரண்டு வகையாக அமைகின்றது. Hire purchase என்பதைத் “தவணைக் கொள்முதல்” என்று விளக்கிக் கூறுகின்றோம். தவணைக் கொள்முதலாக இல்லாமல், ஒரே சமயத்தில் முழுத் தொகையையும் கட்டி விட்டால், அது

outright sale என்று குறிக்கப் பெறும். இதற்கொரு அரிய பெயரை நம்மாழ்வார் பாசுரம் நமக்கு அருளுகின்றது.

“தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்
தந்த பேருதவிக்(குக்) கைம்மாறா
தோள்களை ஆரத் தழுவி என்உயிரை
அறவிலை செய்தனன் சோதீ”

என்று பாடிப் பரவுகின்றார் நம்மாழ்வார். இப்போது நாம் outright sale என்பது, “அறவிலை” என்பதே என்பதை அறிந்து கொண்டு, அளவிலா மகிழ்ச்சியடைகின்றோம்.

Paper weight – காகிதக் காப்பு

நம் மேசை மீது வைக்கப் பெற்றுள்ள காகிதங்கள், காற்றில் பறந்து விடாமல், அவற்றைப் பாதுகாப்பதற்காக, பல வகையான வண்ண வண்ண paper weight வைத்திருக்கிறோம். மேசைக்கு அழகாகவும், காகிதங்களுக்குக் காப்பாகவும் இது அமைகின்றது. எனவே “காகிதக் காப்பு” என்பது தானே இதற்குப் பொருத்தமான பெயர்.

Pass-Book – கைச்சிட்டை

வங்கியில் கணக்கு வைத்திருப்பவருக்கு Pass-Book மிகவும் தேவையாகும். கட்டிய தொகை, எடுத்த தொகை ஆகிய அனைத்து விவரங்களையும் சுருக்கமான முறையில்

கொண்டிருக்கிறது இந்தப் புத்தகம். இதனை நாம் கையடக்கமாக வைத்திருக்கின்றோம். வழிவழி யாக வருகின்ற வளரும் தமிழில் "கைச் சிட்டை" என்பது தானே இதன் கவினார்ந்த பெயர்.

Pedestal Fan – அடிப்பீட மின்விசிறி

Pedestal என்னும் சொல்லை நாம் "பீடம்" என்று வழங்குகின்றோம். Pedestal Fan என்று வரும் போது, அந்த மின் விசிறியின் அமைப்பு நமக்கு நன்கு தெரிகிறது. அடிப்பகுதி, பீடம் போல் இருக்கிறது. அதன் மீது உயரமான ஒரு தண்டு, உச்சியில் மின்விசிறி. இந்த மின்விசிறி, சுழன்று சுழன்று, யாவர்க்கும் காற்றினை அள்ளி வழங்குகின்றது. இதனை "அடிப்பீட மின்விசிறி" என்று அழகு தமிழில் அறிவித்து மகிழலா மல்லவா?

Perfect Market – நிறைசீர் அங்காடி

Perfect Market என்பது பொருளாதாரத் துறையில் புழங்கி வரும் சொல்லாகும். வாங்கு பவர்களும், விற்பவர்களும் எண்ணற்றவர்களாக இருப்பார்கள். குறிப்பிட்ட ஒரு பொருளுக்குச் சந்தையில் ஒரே விலை நிலவும். வாங்குபவரோ விற்பவரோ தம்முடைய நடவடிக்கைகளின் மூலம் பொருளின் விலையை மாற்றி யமைத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் வாங்குபவர் களும், விற்பவர்களும் பொருளின் தன்மையை

நன்கு அறிந்தவர்களாக இருப்பார்கள். எனவே எல்லாச் சிறப்பும் வாய்ந்த இந்தச் சந்தையை "நிறைசீர் அங்காடி" என்று மன நிறைவுடன் சொல்லி மகிழலாம். அல்லவா?

Pessimism – சோர்வு மனப்பான்மை

ஆர்வ மனப்பான்மைக்கு எதிரான மனப் பான்மையே சோர்வு மனப்பான்மையாகும். யான் வெற்றி பெறுவது எங்ஙனம் என்று மனம் தளர்ந்து போதல், தோல்வி உறுதி என்று கைவிட்டு விடுதல் ஆகிய இவையெல்லாம் Pessimism என்று சொல்லப்படும். இதனை அழகு தமிழில் "சோர்வு மனப்பான்மை" என்று சொல்லி மகிழலாமல்லவா!

Plan – அமை திட்டம்

ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றிய செய்திகள் நாளேடுகளில் வந்த வண்ணமிருக்கின்றன. பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பெற்றபின், அவை ஒரு தொகுப்பாக அமைக்கப் பெறு கின்றன. இவற்றை, Plan என்று கூறுகின்றோம். குறிப்பிட்ட கால வரம்பிற்கான திட்டங்கள் ஒன்றாகத் திரட்டப்பெற்று, முழுமையான வடிவில் அமைக்கப்படுகின்ற காரணத்தால், அவற்றை "அமை திட்டம்" என்று அழகிய தமிழில் அழைக்கலாமல்லவா?

Platform – நடைமேடை

பெரிய சாலைகளுக்கு அருகிலும், தொடர் வண்டிப் பாட்டைகளுக்கு அருகிலும், உயரமாகக் கட்டப்பட்டுள்ள நடை பாதையே Plat form ஆகும். ஓரத்தில் அமைந்துள்ள கரை போன்ற இந்த நடைபாதையை "நடைமேடை" என்று நயம் பட உரைக்கலாமல்லவா?

"மூன்றாம் நடை மேடைக்கு அருகில்
தொடர் வண்டி நின்று கொண்டுள்ளது"

என்று அறிவிக்கும் போது "தேன் வந்து பாயுது காதினிலே" என்று துள்ளிக் குதித்து மகிழ்ச்சி யடைகின்றோம்.

Plaza – அங்காடி வளாகம்

கடைகள் ஒரு தொகுப்பாக அமைந்திருக்கு மிடத்தை Plaza என்று கூறுகின்றோம். விறு விறுப்பான விற்பனைகள் நடைபெறுகின்ற மையம் அல்லது வளாகமாக இது திகழ்கிறது. விற்பனை வளாகம் அல்லது அங்காடி வளாகம் என்னும் பெயர் அழகுற அமையுமல்லவா? இதில் "அங்காடி வளாகம்" என்னும் பெயரை ஏற்று, அழகு தமிழின் வளத்தை அதிகப்படுத்தலாமே!

Plus Point – கூடுதல் சிறப்பு

சிறப்பு நிலையில் உள்ள ஒருவருக்கு, மேலும் ஒரு சிறப்புக் கிடைத்துவிடுகின்றது என்று

வைத்துக் கொள்வோம் இதனை ஆங்கிலத்தில் Plus Point என்று கூறுவார்கள். மிகை ஊதியம் பெறுவதைப் போன்ற மேம்பட்ட நிலையாகும் இது. இதனைக் "கூடுதல் சிறப்பு" என்று அழகு தமிழில் கூறி, அகமகிழ்வு கொள்ளலாமல்லவா?

Podium – உரைமேசை

சொற்பொழிவாளர், தமது சொற்பொழிவை ஆற்றும் போது, வசதியாக அவர் நின்று கொள்ளவும், குறிப்புகளை வைத்துக் கொள்ள வும், அவருக்கு முன்பாக ஓர் உயரமான, ஆனால் ஒல்லியான மேசை வைக்கப்படுகிறது. அச்ச மின்றி, அவை நடுக்கமின்றி, எடுப்பாகப் பேசு வதற்கு இந்த மேசை துணை நிற்கிறது. எனவே, இதனை "உரைமேசை" என்று உரைத்து மகிழலாமே!

Point to Point (Bus) – இடைநில்லாப் பேருந்து

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு நேராகச் சென்று சேரும் பேருந்துவை Point to Point என்று சொல்வது வழக்கமாக இருக்கிறது. இந்தப் பேருந்து இடையில் எந்த நிறுத்தத்திலும் நிற்பது இல்லை. எனவே இதனை "இடைநில்லாப் பேருந்து" என்று தடையின்றிச் சொல்லி, உள்ளம் தழைக்கலாமே.

Port of call – கலந்தொடு துறை

கடற் பயணத்தில் ஈடுபட்டுள்ள கப்பல், இரண்டு பெரிய துறைமுகங்களுக்கிடையேயுள்ள ஒரு துறைமுகத்தில், வழக்கத்தின் பேரில், தங்குவதுண்டு. தேவைப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், கப்பலில் காணப்படும் பழுதுகளைச் சீர் செய்து கொள்வதற்காகவும், சில சமயங்களில் சரக்குகளை இறக்கி ஏற்றுவதற்காகவும் இவ்வாறு தங்குவது பழக்கமாகும். இடைவழியில் தங்கிச் செல்ல வசதியாகவுள்ள, இந்தத் துறைமுகத்தை, ஆங்கிலத்தில் Port of call என்று குறிப்பிடுகின்றனர். கப்பலுக்கு மரக்கலம், நாவாய் போன்ற நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கின்றனவல்லவா? எனவே நாம் இதனைக் "கலந்தொடுதுறை" என்று கற்கண்டுத் தமிழில் கூறிக் களிப்படையலாமே! இந்த அரிய மொழிப் பெயர்ப்பினை நமக்கு வழங்கியுள்ளவர் பாண்டிச்சேரி பைந்தமிழ் அறிஞர் பேராசிரியர் ம. இலெனின் தங்கப்பா அவர்கள் ஆவார். அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

Precedent – முன்நிகழ்வு

"முன்னோர் சென்ற வழி பின்னோர்" என்பது பழமொழி. ஒரு புதிய கருத்துருவை (Proposal-ஐ) ஆராயும் போது, "இதைப் போன்ற கருத்தினை இதற்கு முன் நாம் ஆராய்ந்துள்ளோமா, அவ்வாறாயின் அதில் நாமெடுத்த முடிவு என்ன" என்று

அறிய விரும்புகின்றோம். இது தான் precedent என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. இதனை, "முன் நிகழ்வு" என்று கூறிமுழு மகிழ்ச்சி யடையலாமல்லவா?

Presence of Mind – நொடியுணர் நுண்ணறிவு

உலகெங்கும் புழங்குகின்ற ஓர் உயரிய தொடராகும் இது. திடீரெனத் தீங்கொன்று நேர இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதனை அந்த நொடியிலேயே உணர்ந்து கொண்டு, நேர்ந்து விடக்கூடிய தீங்கினை, உடனடியாக நீக்க முயல்கின்ற அறிவு தான் presence of mind என்று தெரிந்து கொள்ளலாம். இந்த நுண்ணறிவு காரணமாகப் பல விபத்துக்கள் தடுக்கப் பட்டுள்ளன. அவ்வாறாயின் இதனை "நொடியுணர் நுண்ணறிவு" என்று தடையின்றிக் கூறலாமல்லவா?

Prestige – பீடுணர்வு

கிடைத்தற்கரிய பதவி, கிடைத்தற்கரிய வெற்றி ஆகியவை காரணமாகச் சிலர் பெருமை மிகு நிலையில் இருப்பார்கள். தற்பெருமை இல்லாத நிலையில் அவர்கள் பீடுணர்வு பெற்றுத் திகழ்வார்கள். நம் பாராட்டுதலுக்கு உரியவர்களாகவும் இருப்பார்கள். அவ்வாறாயின் Prestige என்பது "பீடுணர்வு" தானே.

Profession – செய்தொழில்

Industry என்னும் சொல்லைத் "தொழில்" என்று சொல்லிப் பழகி விட்டோம் "சிறுதொழில்" "பெருந்தொழில்" "குடிசைத்தொழில்" என்றெல்லாம் பெரு வழக்காகப் பயன்படுத்தி வருகின்றோம். அவ்வாறாயின் profession என்பது என்ன? அதனையும் "தொழில்" என்று எவ்வாறு சொல்வது? நெருக்கடியான நேரங்களில் நெருங்கி வந்து உதவி செய்பவர் வள்ளுவர் ஒருவர் தானே. அவர் கூறுகின்றார்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

எத்துணை அருமையான திருக்குறள்! "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதையும் இங்கு நினைவு கொள்வோம். ஆக செய் தொழில் என்னும் செந்தமிழ்ச் சொல்லே Profession என்று புரிந்து கொள்கிறோம்.

Programme – செய்திட்டம்

ஐந்தாண்டுத் திட்டங்கள் போன்றவற்றை வகுத்துக் கொண்ட பிறகு, அவற்றைச் செயற்படுத்துவதற்கான குறைந்த காலத்திட்டங்களைத் தீர்மானிப்பது வழக்கம். முதலாம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள், இரண்டாம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் முதலானவற்றைப் பிரித்துக் கொள்வது

வழக்கம். இத்தகைய திட்டங்களை Programme என்று சொல்வார்கள். இவற்றிற்குச் "செயல் திட்டம்" அல்லது "செய்திட்டம்" என்னும் சிறப்புப் பெயரை அமைத்துச் சிந்தை மகிழலாமல்லவா?

Project – ஆகுதிட்டம்

Project என்பது தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகின்ற ஒரு திட்டமாகும். Neyveli Lignite Project (நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்) இதற்கொரு எடுத்துக் காட்டாகும். தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருதலால், இது ஆகிவரும் திட்டமாக அமைகின்றது. எனவே, இதனை "ஆகு திட்டம்' என்று பாகு தமிழில் பகரலாமல்லவா?

Promptness – விரைந்து வினைசெயல்

Promptness என்னும் சொல்லுக்கு, ஆயத்த மாக விரைந்து அருஞ்செயல் புரிதல் என்னும் விளக்கத்தைக் கொடுக்கலாம். விரைந்து செயல் படுவதைத் தெளிவுபடுத்தி, ஓர் அதிகாரத்தையே வகுத்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை. "வினைசெயல் வகை" என்னும் அந்த அதிகாரம் வினை செய்யும் திறனை விளக்குகின்றது. எனவே, "விரைந்து வினை செயல்" என்னும் தொடர், Promptness என்னும் சொல்லுக்குப் பொருத்தமாக அமைவதைக் கண்டு அகம் மிக மகிழ்கின்றோம்.

Proposal – கருத்துரு

"அரசுக்கு ஒரு Proposal அனுப்பியிருக்கிறோம். அரசு ஆணை கிடைத்தவுடன், உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அரசு அதிகாரிகள் அறிவிப்பார்கள். இந்த ``Proposal'' என்பது என்ன? ஒரு புதிய கருத்து என்பது தானே அதன் பொருள். ஒரு புதிய கருத்திற்கு உருவம் கொடுத்து, அதனை அரசுக்கு அனுப்புகின்றனர். அவ்வாறாயின் Proposal என்பதைக் "கருத்துரு" என்னும் கன்னல் தமிழில் மொழிந்து மகிழலாமே!

Puncture – துளைப்பு

வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் போது, உருளிப் பட்டையில் கூர்மையான ஒரு பொருள் குத்தி விடுகின்றது. அதாவது, சக்கரத்தின் குழாயில் அல்லது சக்கரத்தின் பட்டையில் ஒரு துளை ஏற்பட்டுவிடுகின்றது. இதன் காரணமாக, வண்டியின் ஓட்டம் தடைப் பட்டு விடுகின்றது. வண்டி Puncture ஆகிவிட்டது என்று கூறுகின்றோம். இதனைத் "துளைப்பு" என்று கூறிக் களைப்பைத் தவிர்க்கலாமே!

Query – ஐயவினா

அலுவலகங்களில் பணி செய்பவர்களுக்குப் பழக்கமான சொல்லாகும் இது. "மேலதிகாரி query போட்டு விட்டார்" என்று பேசிக்

கொள்வார்கள். எடுத்துச் சொல்லப்பட்டுள்ள பொருள்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஐயம் ஏற்படும்போது, மேலதிகாரி ஒரு வினாவினைத் தொடுப்பார். இதனை "ஐயவினா" என்று அறிவித்து அகம் மிக மகிழலாமே!

Queue – "நூ" வரிசை

Q வரிசை என்று பேசுகின்றோம். சிலர் இதை எறும்பு வரிசை என்று கூறுவார்கள். "நப்போல் வளை" என்று அறிவுரை கூறுகிறார் ஔவைப் பிராட்டி. "ந" என்னும் எழுத்து, தான் மட்டும் பயனுடையதாக இருந்து, "நா" முதலிய தன் வருக்க எழுத்துகளைத் தழுவிக் கொள்கின்றது. விரைந்து வளரும் வியனுலகில், "ந"வின் இன எழுத்துகளையும் இப்போது பயன்படுத்திக் கொள்ளலாமே! Q என்னும் எழுத்திற்குப் பதிலாக, "நூ" என்னும் எழுத்தைப் பயன்படுத்திக் கொண்டால், மொழிவளருமே. தமிழின் மேன்மை தரணிக்கு விளங்குமே!

Quorum – கோரெண்

செயற்குழு; பொதுக்குழு போன்ற கூட்டங்கள் நடைபெறும் போது ``Quorum இருக்கிறதா" என்று கேட்பது வழக்கம். சட்ட விதிகளால் தீர்மானிக்கப் பெற்ற குறைந்த அளவு எண்ணிக்கையே Quorum ஆகும். இதனை நாம் "குறைவெண் வரம்பு" என்று கூறிக் கொண்டிருந்

தோம். இதனை, ஆங்கிலம் போலவே, அழகு தமிழிலும்; சுருக்கி உரைக்கலாமல்லவா? கூட்டம் நடத்துவதற்குத் தேவைப்படும் அல்லது கோரப் படும் குறைந்த எண்ணிக்கை என்று எண்ணிப் பார்த்தால் தெரியும். தெரிந்தவுடன், "கோரெண்" என்னும் சொல் தானாக ஓடி வரும். இந்த அழகிய மொழி பெயர்ப்பை ஆக்கித் தந்த ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்களை நாம் மறக்கமுடியுமா?

Quotation – விலைப்புள்ளிகள்

பொது நிறுவனங்கள், எந்தப் பொருளை வாங்க முனைந்தாலும், அதனை நயமான விலைக்கு வாங்குவதற்கு முயலல் வேண்டும். இதற்காக அவர்கள், விற்பனை செய்ய விரும்புவோரிடமிருந்து, விலை விவரங்களை, மறையமான முறையில் கேட்டறிவார்கள். இதற்கு, Calling for Quotations என்று பெயர். எனவே விற்பனை செய்ய விரும்புவோர் தருகின்ற விவரங்கள் "விலைப் புள்ளிகள்" என்னும் செந்தமிழ்ப் பெயரைப் பெற்றுச் சிறப்படை கின்றன.

R.M.O. – மனையுறை மருத்துவ அலுவலர்

மருத்துவ மனைகளின் பணிகளுக்கு மருத்துவ மனை முதல்வர் (Dean) முழுமையான பொறுப் பேற்கிறார். இதற்கடுத்த படியாக எல்லாப்

பணிகளையும் சீர் செய்து இயக்கி வருபவராக R.M.O. என்னும் அதிகாரி இருந்து வருகிறார். மருத்துவ மனையின் உயிர் நாடியாகப் பணி புரியும் இவரை ஆங்கிலத்தில், Resident Medical Officer என்று அழைக்கின்றோம். இவரை அழகு தமிழில், “மனையுறை மருத்துவ அலுவலர்” என்று மகிழ்ச்சியாக அழைக்கலாமே.

Ramp – சறுக்குப் பாதை

படிக்கட்டில் ஏறிச் செல்ல முடியாதவர்கள் Ramp என்னும் பாதை மூலமாக மாடிக்குச் சென்றுவிடலாம். மாடியிலிருந்து இறங்கி வருவதும் மிகவும் எளிது. நோயாளிகளை நாற்காலியில் அமரச் செய்து, அவர்களை மேலே கொண்டு செல்ல இந்தப் பாதை பெரிதும் பயன்படுகின்றது. சாய்வாக உள்ள இந்தப் பாதையை, எளிதாக ஏறுவதற்கும் இறங்கு வதற்கும் வசதியாக உள்ள காரணத்தால், “சறுக்குப் பாதை” என்று சாற்றலாமே.

Ready – அணியம்

ஆயிரமாயிரம் அருந்தமிழ்ச் சொற்களை ஆக்கித் தந்துள்ளார் மொழி ஞாயிறு தேவ நேயப் பாவாணர் அவர்கள். அவர், Ready என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாக, நறுந்தமிழ்ச்சொல் ஒன்றை நமக்கு அருளியுள்ளார்.

Ready, தயார், ஆயத்தம் என்னும் சொற்களைச் சற்றே விலகியிருக்குமாறு செய்துவிட்டு, "அணியம்" என்னும் சொல்லை அணிபெறச் செய்துள்ளார். நாம் பேசும் போது, "நான் அணியமாக இருக்கிறேன்" என்று எடுத்துக் கூறி, பாவாணரைப் போற்றி மகிழலாமல்லவா?

Recognition – அறிந்தேற்பு

சிறப்புடைய ஒருவரை, அவருடைய சிறப்பறிந்து பாராட்டுவது Recognition ஆகும். "அரசறிய வீற்றிருந்த வாழ்வு" என்று ஔவையார் பாடுகின்றார். "என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ" என்று கம்பர் கூறியதாக அறிகின்றோம். சிறப்பினை அறிந்து கொள்ளுதலும், அறிந்து கொண்ட பின்னர் அதனை ஏற்றுக் கொள்ளுதலும் Recognition என்பதன் விரிவான விளக்கமாகும். அவ்வா றாயின், அதனை "அறிந்தேற்பு" என்று இலக்கிய மணத்துடன், இனிமையாகக் கூறலாமே.

Red carpet – நடைபாவாடை

Red carpet என்பதைச் "சிவப்புக் கம்பளம்" என்று இக்காலத்தில் மொழி பெயர்க்கின்றோம். பெரிய தலைவர்கள், பெரிய அறிஞர்கள் முதலானோர் வருகை தரும்போது; "சிவப்புக் கம்பள வரவேற்புக் கொடுக்கப்பட்டது" என்று எழுதுகின்றோம். ஆயினும், நம்முடைய வளமான

தமிழ் மொழியில் "நடைபாவாடை" என்னும் அரிய சொல் அமைந்து கிடக்கின்றது. "நடத்தற் பொருட்டு வழியில் விரிக்கும் ஆடை" என்பது இதற்குரிய பொருளாகும். திருக்குற்றாலத் தலப்புராணம், "விரிப்புறு நடைப் பாவாடை மேனகை விரிப்ப" என்று எடுத்துக் கூறி நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. சிவப்புக்கம்பளம் இருந்து விட்டுப் போகட்டும். "நடை பாவாடை" என்னும் நல்ல தமிழையும் நாம் நடைமுறைப் படுத்த வேண்டாமா?

Remedy – தீர்திறம்

Remedy என்னும் ஆங்கிலச் சொல்லை நாம் "பரிகாரம்" என்று பகர்ந்து வருகின்றோம். இதற்கொரு தீந்தமிழ்ச் சொல்லைப் பரிமேலழகர் பயன்படுத்துகிறார். 1275 ஆம் குறளுரையில் "தீர்திறம்" என்னும் அழகிய சொல்லாட்சியை அவர் வழங்குகின்றார். Remedy என்பதைத் "தீர்திறம்" என்று சொல்லிப் பார்த்தால் ஆங்கிலத்தை விட அழகு தமிழ் இனிப்பதை எண்ணி இன்புறலாம்.

Risk – கவ்விடர்

Risk—என்னும் ஆங்கிலச் சொல்லை அழகு தமிழில் சொல்வதும் ஒரு Risk ஆக இருக்கிறது. ஆயினும் பாரதியார் பாடல் ஒன்றை நாம் நினைவு கூர்ந்தால், சிக்கல் எளிதில் தீர்ந்து விடும்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்"

மறக்க முடியாத இந்த வரிகளில் "தருமத்தைச் சூது கவ்வும்" என்று எச்சரிக்கை செய்கிறார் பாரதியார். நாட்டைக் காத்த பாரதியார், நம் மொழியையும் காத்துப் பாட்டைப் பொழிந்துள் ளார். கணிக்க முடியாத இடரைக் கணித்தும் காட்டுகிறார் அவர். கவ்வுகின்ற இடர்தானே Risk.

Rumour – ஓமல்

பெரும்பாலும் உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சிலர் கதையாகக் கட்டிவிடுவார்கள். விரைந்து பரவும் வாய்ப்பைப் பெறும் இதனை ஆங்கிலத்தில் Rumour என்று கூறுவார்கள். நாட்டுப் புறங்களில் "ஓமல்" என்ற சொல்லும் "ஓமலிப்பு" என்ற சொல்லும் புழக்கத்தில் உள்ளன. ஓமல் என்ற Rumour-ஐ ஊரெங்கும் பரப்புவதுதான் ஓமலிப்பு. சுருக்கமான, இனிமை யான பெயர் தான் "ஓமல்" என்று ஓங்கி ஒலிக்கலாமே.

Scheme – சமைதிட்டம்

திட்டங்கள் உருவாக்கப்படும் முறையை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். அரசைப் பொறுத்த வரையில், பல்வேறு துறைகள் இருக்கின்றன.

அவ்வத் துறைகளின் தலைவர்கள் விவரங்களைச் சேகரித்து, திட்டங்களை வகுத்து, அவற்றை அரசுக்கு அனுப்புகின்றனர். அவற்றை அரசு நன்கு ஆராய்ந்து, முடிவெடுத்து, ஆணை வெளி யிடுகின்றது. ஆக்கப்படும் அல்லது சமைக்கப்படும் திட்டங்களாக இவை அமைவதால் இவற்றைச் "சமைதிட்டம்" என்று சொல்லிச் சுவைத்து மகிழலாமே!

Season – செம்பருவம்

Season என்னும் சொல்லைப் பொதுவாகப் "பருவம்" என்றுதான் மொழி பெயர்க்கின்றோம். ஆனால் இது பல நேரங்களில் முழுமையான பொருளைத் தருவதில்லை. குற்றாலம் Season, உதகமண்டலம் Season, மாம்பழம் Season, சாத்துக்குடி Season என்றெல்லாம் பேசுகின் றோம். இத்தகைய நேரங்களில் "பருவம்" என்னும் சொல் சரியாக ஒட்டுவதில்லை. இதனைச் சிறிது மாற்றிச் "செம்பருவம்" என்று செப்பினால், செந்தமிழும் மணக்கிறது செம்பொருளும் விளங்குகின்றது. வளமான தமிழல்லவா? வழங்கி மகிழ்வோம்! இத்தகைய அரிய மொழி பெயர்ப்பு களைப் பெரிய மனத்துடன் பாராட்டி மகிழும் நண்பர் பி.வி. கிரி. அவர்களை நாம் மனமாரப் பாராட்ட வேண்டாமா?

Semester – படிப்புப் பருவம்

Semester என்னும் சொல்லுக்குப் "பருவம்" என்னும் சொல் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. நான்கு ஆண்டு அல்லது ஐந்து ஆண்டுக் காலம் படித்து, நிறைவு செய்யப்பட வேண்டிய படிப்பின் இடையிடையே, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தேர்வுகள் நடத்தி, வெற்றி தோல்விகளை அறிவித்து வருகின்றனர். ஆறுமாதப் படிப்பு என்பது முக்கியமான கருத்தாக இருந்த போதிலும், சில நாடுகளில் நான்கு மாதங்களில் கூட, இந்தத் தேர்வுகளை நடத்துகின்றனர். ஆகையால், பொதுவான முறையில் "படிப்புப் பருவம்" என்று மட்டும் அமைத்துக் கொண்டால், அருஞ்சிறப்பாக விளங்குமல்லவா?

Senior – முதுவர்

Senior என்னும் சொல் அடிக்கடி பேசப் படுகின்ற ஒரு சொல்லாகும். "அவர் எனக்கு Senior" என்று சொல்லும் வழக்கம் இருந்து வருகிறது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஒரு செய்தியினைத் தெரிவிக்கிறார்.

> "நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
> முந்து கிளவாச் செறிவு"

என்பது அவருடைய அமுத வாக்காகும். பெரியவர்கள் இருக்கின்ற அவையிலே, அவர்கள் பேசுவதற்கு முன்பாகச் சிறியவர்கள் முந்திக்

கொண்டு பேசுதல் ஆகாது என்பது தான் இதற்குரிய விளக்கமாகும். Senior என்பவர் யார் என்பது இப்பொழுது புரிகின்றதல்லவா? Senior என்பவரை "முதுவர்" என்னும் வள்ளுவரின் வாய்மொழியால் வழங்கி மகிழலாமல்லவா?

Senior Citizen – முதுநிலைக்குடிமகன்

தொடர்வண்டி நிலையத்தில் பயணச் சீட்டு களைப் பதிவு செய்யும் போது, Senior Citizen என்று, நம்மை நாமே, அறிமுகம் செய்து கொள்கின்றோம். நம் முதிர்ந்த அகவை காரணமாக, நமக்குச் சலுகை கிடைக்கின்றது. நலந்தரும் "முதுநிலைக் குடிமகனாக" நாட்டு மக்கள் போற்றும்படி வாழ்வதில் நமக்கு மகிழ்ச்சி தானே ஏற்படுகின்றது.

Shampoo – குளியல்குழம்பு

இந்தி மொழிச் சொல்லாகிய இது இன்று இல்லங்களில் ஒலிக்கின்ற ஒரு சொல்லாக விளங்குகின்றது. இச்சொல் ஆங்கில அகராதி களிலும் இடம் பிடித்துக் கொண்டதை நாம் பார்க்கின்றோம். தலை குளிப்பதற்குப் பயன் படுகின்ற சவர்க்கார நீர்மந்தான் Shampoo ஆகும். இதனைக் "குளியல் குழம்பு" என்று கூறிக் களிப்படையலாமே!

Sharpener – கூராக்கி

Pencil என்னும் சொல்லை நாம் பொதுவாக எழுதுகோல் என்று குறிப்பிடுகின்றோம். அதைச் சரியாகச் சொல்ல வேண்டுமானால் "கரி எழுது கோல்" என்று தான் சொல்லவேண்டும். இந்த எழுது கோலைக் கூராக ஆக்குவதற்கு Sharpener என்னும் கருவியைப் பயன்படுத்துகிறோம். எனவே இதனைக் "கூராக்கி" என்று கூறி மகிழ்ச்சி யடையலாமல்லவா?

Shaving Blade – மழிப்புத் தகடு

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்று கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை. அன்றாடம் தேவைப்படும் பொருளாக Shaving Blade இருந்து வருகிறது. மழித்தல் செய்வதற்குப் பயன்படும் தகடாக இது இருப்பதால், இதனை "மழிப்புத் தகடு" என்று மகிழ்ச்சியாகக் கூறலாமே!

Sick Patient – நலிவுற்ற நோயாளர்

Patient என்னும் சொல்லை "நோயாளர்" என்று எழிலுற மொழி பெயர்க்கின்றோம். எனினும் Sick Patient என்று சொல்லுகின்ற வழக்கமும் இருக்கத்தான் செய்கின்றது. Sick Patient என்னும் தொடரை "நலிவுற்ற நோயாளர்"

என்று நல்ல தமிழில் மொழி பெயர்த்து மகிழலாமல்லவா?

Side-Effect – பக்க விளைவுகள்

உடற்பிணியைப் போக்கிக் கொள்ள மருந்து அருந்துகின்றோம். பெரும்பாலும், அம்மருந்துகள் நன்மையே தருகின்றன. என்றாலும் ஒரு சில மருந்துகள், புதிய தீங்குகளையும் புரிந்து விடுகின்றன. இதனை ஆங்கிலத்தில் Side-Effect என்று கூறுவர். இந்தச் சொல்லை, நல்ல தமிழில், "பக்க விளைவுகள்" என்று பகரலாமல்லவா? (பின்விளைவுகள்" என்று மொழி பெயர்ப்பின் அது ``After effects என்று ஆகிவிடும் என்பதை உணர்தல் வேண்டும்.)

Sit-out – முன்றில் அமர்வு

வீட்டிற்கு வெளியே, குறுகலாகவும் நீளமாகவும் கட்டப் பெற்றுள்ள அமைப்பே Sit-out என்று சொல்லப்படுகின்றது. ஒரு பக்கம் வீட்டைச் சேர்ந்த சுவரும், மற்ற மூன்று பக்கங்களிலும் கைப்பிடிச்சுவர் மீது கம்பியடைப்புகளும் காணப்படும். காற்றோட்டமான இந்த இடத்தில், "காண வருபவர்கள்" வசதியாகச் சிறிது நேரம் அமர்ந்திருக்க நாற்காலிகள் போடப்பட்டிருக்கும். வீட்டிற்கு முன்புள்ள அமர்விடம் என்பதால், Sit-out என்னும் இந்த இடத்தை, "முன்றில்

அமர்வு" என்னும் செந்தமிழ்ப் பெயரால் செப்பி மகிழலாமல்லவா?

Splint – சிம்பு

"கைம்முரிவு" ஏற்பட்டால், நாட்டுப் புறங்களில், முரிவைச் சரி செய்து, மருந் தெண்ணெய் பூசி, மூங்கில் பிளாச்சி (மூங்கில் துண்டுகள்) வைத்துக் கட்டுவார்கள். இப்போது, நவீன முறையில், மூங்கில் பத்தைகளுக்குப் பதிலாக, உலோகத் தகடுகளைப் பயன்படுத்து கிறார்கள். மூங்கில் பத்தைகளை வைத்துக் கட்டும் பழைய பழக்கத்திற்குச் "சிம்பு" வைத்துக் கட்டுதல்" என்று சொல்வது வழக்கம். உலோகத் தகடுகள் வைத்துக் கட்டும் பழக்கத்திற்கும் "சிம்பு வைத்துக் கட்டுதல்" என்றே கூறலாமல்லவா? அவ்வாறாயின் Splint என்பதை "சிம்பு" என்று செப்பமிடலாமே.

Stage – அரங்கமேடை

நாடகம் முதலான சுவையான நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு ஏதுவாக Stage, அமைக்கப் பட்டிருக்கிறது. இது, சற்றே உயரமாக அமைந் துள்ள மேடையாகும். இதனை, "அரங்கமேடை" என்று அழகு தமிழில் அமைத்து மகிழலாமே.

Stage-Fear – அவையச்சம்

முதன் முறையாகக் கூட்டங்களில் பேச முற்படுபவர்களுக்குப் பேச்சு வராது. உடம்பெல்லாம் வியர்த்து நடுங்கும். இதனை ஆங்கிலத்தில் Stage Fear என்று கூறுவார்கள். குமரன் அருள் பெற்ற குமர குருபரரின் பாடல் ஒன்றினை, இப்போது நினைவிற்குக் கொண்டு வருவோம்.

"அவையஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவை யஞ்சா ஆகுலச் சொல்லும்–நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலும்
பூத்தலிற் பூவாமை நன்று"

என்று பேசுகிறார் அவர். கற்றவர் சிலர், அறிஞர்களின் அவையைக் கண்டு அச்சமடைந்து, உடல் நடுங்குவார்களாம். இதனால் "அவை யச்சம்" என்பதுதான், Stage Fear என்பதற்கு, இணையான செந்தமிழ்ச் சொல் என்பது இனிது விளங்குமன்றோ!

Stamina – தாங்குதிறன்

குறிப்பிட்ட ஒரு பணியை, இடையில் நிறுத்தி விடாமல், தொடர்ந்து செய்து முடிக்கத் தேவைப் படும் ஆற்றலை, Stamina என்று கூறுவது வழக்கம். எடுத்துக்காட்டாக ஓட்டப் பந்தயத்தில் "இன்னும் சிறிது ஓடியிருந்தால் முதற்பரிசை வென்றிருக்க லாம்" என்று சொல்வதுண்டு. அத்தகைய நிலையில், தேவையான தாங்குந்திறன் இல்லை

யென்று கூறுவோம். எனவே Stamina என்னும் ஆங்கிலச் சொல்லை, அழகு தமிழில், “தாங்குதிறன்” என்று ஓங்கி உரைக்கலாமல்லவா?

Stapler – கம்பித்தைப்பி

காகிதங்களை ஒன்றாக இணைப்பதற்குக் கருவியில் செருகப்பட்ட கம்பியை நாம் பயன் படுத்துகிறோம். உரிய கருவியில் பொருத்தப்பட்ட முள் போன்ற அந்தக் கம்பி, காகிதங்களை இணைத்துக் காத்து நிற்கின்றது. அதனைத் தைப்புமுள் அல்லது தைப்புக் கம்பி என்று குறிப்பிட்டால், Stapler pin என்றாகி விடு மல்லவா? Stapler என்னும் சொல் ஒரு கருவியைக் குறிப்பதால் அதனைக் “கம்பித் தைப்பி” என்று களிப்புடன் கூறலாமே!

Stepney – சேமச் சக்கரம்

Stepney என்பதன் பொருள் நமக்கு நன்றாகத் தெரியும். உந்து வண்டிகளில் செல்லும் போது, அவற்றின் சக்கரம் பழுதாகி விட்டால், அதற்கு மாற்றுச் சக்கரம் பொருத்தப்படும். அதற்காக, உபரிச் சக்கரம் ஒன்றைக் கொண்டு செல்வது வழக்கம். இதை Stepney என்று சொல்லு கின்றோம்.

அச்சு முரிந்து விட்டால், அதற்கு மாற்றாகப் பயன்படுத்த “சேம அச்சு” கொண்டு செல்லப் பட்டதாகப் புறநானூற்றுப் பாடலொன்று

கூறுகின்றது. இதே முறையில், Stepney என்னும் சொல்லுக்குச் “சேமச் சக்கரம்” என்னும் மொழி பெயர்ப்புப் பொருத்தமானதாகும்.

Stethos Cope – நாடிக்குழல்

நாடி பார்க்கும் வழக்கம் நம் நாட்டில் காலங் காலமாக இருந்து வருகிறது. சித்த மருத்துவர்கள், இதில் சிறந்த வல்லுநர்களாகத் திகழ்கின்றனர். ஆங்கில மருத்துவமுறையில், நாடியைக் கண்டறிய Stethos Cope என்னும் கருவி பயன் படுத்தப்பட்டு வருகின்றது. “நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்” என்று அழகுற விளக்குகின்றார் வள்ளுவர். நாடியை நாடிப் பார்த்து நலம் சேர்க்கும் கருவியை “நாடிக் குழல்” என்று அழைக்கலாமல்லவா?

Stool – உயரக்காலி

Stool என்னும் தட்டையான இருக்கை, சில சமயங்களில் குள்ளமாகவும் இருக்கும், சில சமயங்களில் உயரமாகவும் இருக்கும். சிறு பான்மை குள்ளமாகவும், பெரும்பான்மை உயர மாகவும் இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஒல்லியான கால்கள் என்பதையும் உணர் கின்றோம். ஆட்சியாளரின் உயர்வைக் குறிக்கின்ற அடையாளமாகவும் இந்த இருக்கை அமைவ துண்டு. அவ்வாறாயின், முக்காலி, நாற்காலி என்னும் பெயர்களைப் போல் உயரக்காலி

என்னும் பெயரைச் சூட்டி உவகை கொள்ள லாமே!

Stretcher – கைப்படுக்கை

நடக்க இயலாத நிலையிலுள்ள நோயாளி களைச் சக்கர நாற்காலியில் அமரச் செய்து, வண்டி போல் நகர்த்திச் செல்வது வழக்கம். சில நோயாளிகள் உட்காரவும் முடியாமல் படுத்த படுக்கையாக இருப்பார்கள். அவர்களை Stretcher-இல் கிடத்தித் தூக்கிச் செல்வது வழக்கம். இருமருங்கும் இருவர் நின்று தூக்கிச் செல்லும் இப்படுக்கையைக் "கைப்படுக்கை" என்று கனிவுடன் கூறலாமல்லவா?

Stores – பண்டகம்

Co-operative stores என்று வரும்போது "கூட்டுறவுப் பண்டகசாலை" என்று குறிக்கின் றோம். ஆயினும், தனியார் நடத்துகின்ற பல சரக்குக் கடைகளைப் "பண்டக சாலை" என்று பகர்வது தேவையில்லை யல்லவா?

"கண்ணபிரான் Stores" என்று வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது "கண்ண பிரான் பண்டகம்" என்று சுருக்கிக்கூறி மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொள்ளலாமே.

Style – ஒயில்

உலக வழக்கில், "அவர் ஒரு Style-ஆக நடக்கிறார்" என்று சொல்வதுண்டு. Style என்று சொன்ன மாத்திரத்திலேயே, ஒரு "மயல்" தோன்றி மகிழ்ச்சியடைகின்றோம். இதைத் தமிழில் "ஒயில்" என்று சொல்லிப் பார்த்தால், ஒய்யார நடை உடனே தோன்றும். அவ்வாறாயின், style என்பது ஒயில்தானே.

Sump – தொட்டிக்கிணறு

தலைநகர் போன்ற பெரிய நகரங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவது இயல்பாக இருந்து வருகிறது. ஆகையால் தண்ணீர்க்குழாயில் வருகின்ற நீரைச் சேமித்து வைப்பதற்காகத் தரையில் ஒரு தொட்டியைக் கட்டுகின்றார்கள். இதற்கு ஆங்கிலத்தில் Sump என்று பெயர். கிணறு போல் இருக்கின்ற இந்தத் தொட்டியைத் "தொட்டிக் கிணறு" என்று அட்டியின்றி அழைக்கலாமல்லவா?

Sunstroke – வெப்பத்தாக்கு

கோடைக் காலங்களில் Sunstroke ஏற்பட்டு விட்டதாக எடுத்துக் கூறுவார்கள். வெயில் நேரத்தில் வெளியில் செல்லும் போது, அதிக வெப்பத்தால் அல்லல் படுகின்றோம். உடற் களைப்பு உடன் தோன்றி விடுகின்றது. Sun-shade

என்பதை வெப்பத்தடுப்பி என்பதைப் போல, Sun-stroke என்பதை "வெப்பத்தாக்கு" என்று செப்பி மகிழலாமே.

Suspense – ஆவல் தவிப்பு

போர்க்காலங்களில், எதிரிவிமானங்கள் நம் நகர் நோக்கி வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது, அபாயச் சங்குகள் அலறத் தொடங்கும். வீட்டில் பாதுகாப்பான ஓரிடத்தில் நாம் பதுங்கிக் கொள்வோம். "என்ன நேருமோ, எப்போது நேருமோ" என்று தவித்துக் கொண்டிருப்போம். இந்த நிலைக்குப் பெயர்தான் Suspense ஆகும். அவ்வாறாயின், இதனை "ஆவல்தவிப்பு" என்று அழகுற மொழியலாமே.

Teapoy – தணிவுமேசை

இன்று விதம் விதமான மேசைகள் பழக்கத்திற்கு வந்துவிட்டன. எனினும் Teapoy என்னும் சிறிய மேசையும் நிலைத்து நின்றுவிட்டது. விருந்தினர்க்குச் சிற்றுண்டியும் தேநீரும் படைத்து மகிழ ``Teapoy எங்கே" என்று தேடுகின்றோம். தேநீர் வழங்க வசதியாகவுள்ள சிறிய மேசையே Teapoy ஆகும். பணிந்து நிற்கும் இந்தச் சிறிய மேசையைத் "தணிவு மேசை" என்று தடையின்றிக் கூறலாமே.

Temptation – அவா ஈர்ப்பு

நம்முடைய ஆசைகளைத் தூண்டிவிட்டுச் சிலர் வேடிக்கை பார்ப்பார்கள். நாமும் தடுமாறிப் போவோம். ஈர்க்கின்ற ஆசையானது நம்மை மதி மயங்கச் செய்கிறது. இதனை ஆங்கிலத்தில் Temptation என்று கூறுவார்கள். ஆசைக்கு அடிமையாகி, அதன் வழியே சென்று விடுவதால், "அவாஈர்ப்பு" என்று நாம் இதனை இயம்பி இன்புறலாமே!

Theme park – பொருட்பொலிவுப் பூங்கா

மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் பூங்காக்கள் நிறைய இருக்கின்றன. பல்வேறு வகைப்பட்ட பூங்காக்களிலே ``Theme park" என்பதும் ஒரு வகையாகும். இதுவும் ஒரு மனமகிழ்வுப் பூங்காதான். இருந்த போதிலும், ஒரு பொருளை மையமாக வைத்து அதன் அடிப்படையில் அமைப்புகளையும், ஒப்பனைகளையும் செய்திருப் பார்கள். எனவே, இதனைப் "பொருட்பொலிவுப் பூங்கா" என்று பொருத்தமாகப் பெயரிட்டுப் பூரிப்படையலாமே!

Threephase – மும்முனை மின்சாரம்

மின்சாரம் மூன்று கம்பி வடங்கள் மூலமாகச் செலுத்தப்படுகின்றது. பெரும்பாலான இல்லங் களில் "ஒருமுனை" மின்சார வசதி மட்டுமே இருக்கும். கூடுதலான வசதியைப் பெற விரும்பு

வோர், மும்முனை மின்சாரத்திற்கு ஏற்பாடு செய்து கொள்வர். "ஒரு முனையில்" அதாவது ஒரு கம்பி வடத்தில், மின் தடங்கல் ஏற்பட்டால், மற்ற இரு கம்பி வடங்களில் ஒன்றின் மூலமாகத் தொடர்ந்து மின்னோட்டத்திற்கு வழி செய்யலாம். எனவே Three phase என்பதை "மும்முனை மின்சாரம்" என்று நாம் முனைந்து மொழியலாமே.

Transformer - மின் அளவு மாற்றி

மின் அழுத்தத்தை, நம் தேவைக்கு ஏற்றவாறு கூட்டவோ குறைக்கவோ பயன்படுகின்ற கருவிக்கு Transformer என்று பெயர். எனவே, இதனை "மின் அளவு மாற்றி" என்று மென்மை யாக மொழியலாமே.

Transaction – செயல்வினை

அலுவலகங்களில் Official Transaction என்னும் தொடர் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு, "உரிய பணிகளை நடத்துதல்" அல்லது "செய்து முடித்தல்" என்று பொருள் கூறலாம். அலுவலக நடவடிக்கையாக இருக்கின்ற காரணத் தால் இதற்குப் பொருத்தமான மொழி பெயர்ப்பை நாம் காண வேண்டும். இங்கே, செயல்களைச் செய்து முடித்தல் என்னும் பொருள் விளங்கித் தோன்ற வேண்டும். செய்யப்படும் வினைதானே செயல்வினை.

அவ்வாறாயின், Transaction - என்பதை "செயல் வினை" என்று செப்பி மகிழலாமே?

Trunk Box - சேமப்பேழை

தமக்குச் சொந்தமான பொருள்களையும் துணிமணிகளையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உதவும் பெரிய, வலிமையான பெட்டியை Trunk Box என்று கூறுகின்றோம். சேமமாக வைத்துக்கொள்ள உதவும் பெட்டியை "சேமப்பேழை" என்று செப்பி மகிழலாமல்லவா?

Unparliamentary words – அவையல் கிளவி

அவையில் பேசக்கூடாத, வரம்பு மீறிய, சொற்களை Unparliamentary words என்று கூறுகின்றோம். "மன்ற மரபிற்கு அல்லது அவை மரபிற்கு ஒவ்வாத சொற்கள்" என்பது இப்போதுள்ள மொழி பெயர்ப்பாகும். இதனைச் சுருக்கிச் சொல்வதற்குத் தொல்காப்பியம் நமக்கு துணை நிற்கின்றது. "அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" என்பது தொல்காப்பிய நூற்பாவாகும். நல்லார் அவையின் கண்ணே சொல்லக்கூடாத சொற்களை "அவையல் கிளவி" (அவை அல் கிளவி) என்று அழகு தமிழில் கூறி மகிழலாமல்லவா?

Up-to-date – நாளிதுவரையில்

இன்றுவரை எல்லாச் செய்திகளையும் தெரிந்து வைத்திருக்கும் ஒருவரை "இவர் up-to-date ஆக இருக்கிறார்" என்று கூறுகின்றோம். இதனை "நாளதுவரையில்" என்று இப்போது கூறிவருகின்றோம். ஆனால் அவ்வாறு கூறினால், "ஏதோவொரு முன்னைய தேதி வரையில்" என்று பொருளாகிவிடும். எனவே "நாளிது வரையில்" (இந்நாள் வரையில்) என்று தமிழில் பொருத்தமாக எடுத்துக் கூறி இன்புறலாமல்லவா?

Van – பெட்டியுந்து

உந்து வண்டிகள் பல வகைப்படும். பெரிய உந்துவாக விளங்கும் Bus "பேருந்து" என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டது. சிறிய car "சீருந்து" என்னும் பெயரை ஏற்றுக் கொண்டது. சரக்குகளை ஏற்றிச் செல்லும் உந்து "சரக்குந்து" என்னும் பெயரைப் பெற்று திகழ்கின்றது. Van என்பதும் ஒருவகை உந்து வண்டியே ஆகும். இதன் அமைப்பை நோக்குகையில், வளைவாக இருக்கும் கூண்டுவண்டியைப் போல் இல்லாமல், தட்டையான வடிவத்தில் மூடப்பட்டுள்ளது. இதனைப் "பெட்டியுந்து" என்று பேரார்வத்துடன் பேசி மகிழலாமே!

Varnish – மெருகெண்ணெய்

நம் இல்லங்களில் உள்ள மரச் சாமான் களுக்கும், உலோகங்களால் செய்யப் பெற்ற பெட்டி போன்ற பொருள்களுக்கும், Varnish என்னும் எண்ணெய் பூசுகின்றோம். இதனால், அந்தப் பொருள்களுக்கு ஒரு பளபளப்பும், மினுமினுப்பும் ஏற்படுகின்றன. இவ்வாறு மெருகூட்டும் அந்த எண்ணெயை, "மெரு கெண்ணெய்" என்று சொல்லி, அழகூட்டிப் பார்க்கலாமே! தமிழ் மலையாக விளங்கிய மறை மலையடிகளார் வழங்கிய பொன் மணியாகும் இம்மொழிபெயர்ப்பு. அவருடைய திருப்பெயரை நாம் உருப்போட்டு மகிழலாமே!

Ventilator – காலதர்

Window என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாக "ஜன்னல்" என்னும் சொல்லை நாம் பயன்படுத்தி வருகின்றோம். போர்ச்சுகீசிய மொழிச் சொல்லாகிய இது, நம்மை இறுகப் பற்றிக் கொண்டுள்ளது. ஆயினும் நம்முடைய வளமான தமிழ் மொழியில் மூன்று முழுமணிச் சொற்கள் விளங்கித் தோன்றுகின்றன. அவை, சாளரம், பலகணி, காலதர் என்பனவாகும். "பலகணி" என்பது பல கண்களையுடையது. காலதர் என்பது கால்+அதர் என்றாகிக் காற்று வரும் வழியைக் குறிக்கும். இவற்றைப் பொருத்த மான இடங்களில் பயன்படுத்த நாம் கற்றுக்

கொள்ள வேண்டும். "காலதர்" என்னும் களிப் பூட்டும் சொல்லை ``Ventilator" என்னும் சொல்லுக்கு ஈடாகப் பயன்படுத்தி இன்புறலா மல்லவா?

Visiting card – அறிமுக அட்டை

பெரிய அதிகாரிகளைக் காணச் செல்லும் போது, அழகிய அச்சிட்ட துண்டு அட்டையைப் பயன்படுத்துகிறோம். ஆங்கிலத்தில் இதனை Visiting card என்று கூறுவார்கள். நம்மைப்பற்றிய செய்திகளைச் சுருக்கமாக அறிவிக்கின்ற காரணத் தால், இதனை "அறிமுக அட்டை" என்று அறிமுகப்படுத்தலாமே.

Walkie-Talkie – நடைபேசி

இந்தத் தொலைபேசியின் மூலம் நடந்து கொண்டே பிறருக்குச் செய்திகளைத் தெரி விக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. பேசி முடித்த வுடன், அதாவது, "பேசி முடித்துவிட்டேன்" என்று தெரிவித்தவுடன், இதே கருவியையுடைய இன்னொருவர் பதில் தெரிவிக்கும் வாய்ப் பினைப் பெறுகின்றார். எனவே இதனை இரு மருங்கும் இயங்குகின்ற "வானொலி" என்று சொல்வது உண்டு. பெரும்பாலும் காவலர்கள் இந்தக் கருவியைப் பயன்படுத்துகிறார்கள். நடந்து கொண்டே பேசும் வாய்ப்பினைத் தருகின்ற இந்தத் தொலைபேசியை "நடைபேசி" என்று

சுருங்கச் சொல்லி மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொள்ளலாமே!

WardNurse – பணிப்பகுதிச் செவிலி.

மருத்துவமனை என்பது ஒரு பெரிய கடல். ஒவ்வொரு நோய்க்கும் தக்கவாறு, மருத்துவ மனையைப் பகுதி பகுதியாகப் பிரித்துள்ளார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு Nurse இருக்கிறார். நோயாளிகளைத் தாய் போல் கவனித்துக் கொள்பவர் இந்த Nurse ஆவார். Ward Nurse என்பவரைப் "பணிப்பகுதிச் செவிலி" என்று பாங்குற மொழியலாமே.

Weightage – மதிப்பேற்றம்

ஒரு புதிய சம்பளத் திட்டத்தையோ அல்லது புதிய பதவியுயர்வுத் திட்டத்தையோ செயற் படுத்த முனையும் போது, நீண்ட நாட்களாகப் பணியில் தேங்கி நிற்பவர்களுக்கு, நியாயமான சில சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுவது வழக்கம். இதை ஆங்கிலத்தில் Weightage என்று கூறுவார்கள். இச்சூழ்நிலையில், இயல்பாகக் கிடைக்கின்ற மதிப்பு நிலையைவிடச் சற்றுக் கூடுதல் மதிப்புத் தரப்படுகின்ற காரணத்தால், இதனை "மதிப்பேற்றம்" என்று மகிழ்ச்சியாகக் கூறலாமே.

Weld Mesh – கம்பி வலை

திருடர்கள், தங்களின் கைவரிசைகளைக் காட்டாதிருக்க, நம் இல்லங்களில் தக்க பாதுகாப்புகளைச் செய்து கொள்கின்றோம். அவற்றுள் ஒன்றுதான் Weld mesh என்னும் அமைப்பு. கம்பிகளை வளைத்தும் இணைத்தும் உருவாக்கப் பெற்ற வலையாகும் இது. எனவே இதனைக் கனிந்த தமிழில் “கம்பி வலை” என்று அழைக்கலாமே.

Whip – ஏவுநர்

சட்டமன்ற அரசியல் கட்சிக்குழுக்கள் ஒவ்வொன்றிற்கும், ஒரு தலைவர் இருப்பார். இந்தக் குழுத் தலைவருக்கு ஆங்கிலத்தில் Whip என்று பெயர். கட்சி உறுப்பினர்களின் வருகையை உறுதிப்படுத்துவதும், ஏற்கப்பட்ட முறையில் அவர்களை வாக்களிக்குமாறு செய்வதும், குழுத்தலைவரின் கடமைகளாகும். இவரை, இப்போது “கொறடா” என்று கூறி வருகிறோம். இந்தச் சொல்லின் ஓசையும் பொருளும் இனிமை தருவனவாக அமையவில்லை. எனவே கட்டளையிடுபவராகச் செயற்படும் இவரை, “ஏவுநர்” என்னும் எழில் சிந்தும் பெயரால் அழைத்து மகிழலாமல்லவா?

With regards – கனிந்த அன்புடன்

ஆங்கிலத்தில் நேர்முகக்கடிதம் எழுதுபவர்கள் கடிதத்தின் முடிவில் WithRegards என்று குறிப்பது வழக்கம். அன்பினையும் அதே சமயத்தில் மரியாதையையும் தெரிவிக்கும் முறையாகும் இது. நாமும் நல்ல தமிழில் "கனிந்த அன்புடன்" என்னும் கனி போன்ற சொற்களைக் குறித்தெழுதிக் களிப்புக் கடலில் மூழ்கித் திளைக்கலாமே!

Work spot – வேலைத் தலைப்பு

வயல் வெளியில் வேலை நடப்பதைப் பார்ப் பதற்காக, என் தந்தையார் புறப்பட்டுச் சென்றார். நானும் உடன் சென்றேன். அங்குச் சென்று ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்த அவர் "வேலைத் தலைப்பில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாமா? நாமும் இறங்கி வேலை செய்ய வேண்டாமா" என்று கூறினார். "வேலைத் தலைப்பு" என்னும் தொடர் என்னை வேகமாகப் பற்றிக் கொண்டு விட்டது! Work spot என்பது தானே வேலைத் தலைப்பு? மெய் சிலிர்க்கச் செய்த இந்தச் செய்தியைக் கேட்டு, மெத்தவும் மகிழ்ச்சி அடையலாமல்லவா?

Zero – சுழியம்

இப்போது Zero என்பதை "பூஜ்யம்" என்று சொல்லி வருகின்றோம். "ஆசிரியர் சுழித்து விட்டார்". என்று சொல்லிப் பார்த்தால், "சுழி" என்பது தான் Zero என்பது புரியும். சுழிக்கு "அம்" என்னும் அழகைச் சேர்த்துப் பார்த்தால், நல்ல தொரு சொல் நமக்குக் கிடைத்து விடுகின்றது. Zero என்பதைச் "சுழியம்" என்று கூறி எழில் கூட்டலாமல்லவா?

தமிழ்த் தொண்டர்

கோ. முத்துப்பிள்ளை

தலைமைச் செயலகப் பணியில் சேர்ந்தார். பல்வேறு தமிழ் அமைப்புகளை உருவாக்கித் தாய்மொழியின் வளர்ச்சிக்கு வித்திட்டார். பள்ளிப் பருவத்திலேயே தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பு மதிப்பெண்கள் பெற்று முதலிடம் வகித்தார். பரிசுகளும் பாராட்டுகளும் நிறையப் பெற்றார்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்காக இந்திய விவரச் சுவடியின் முதல் நான்கு தொகுதிகளின் தமிழாக்கத்தை ஒருங்கிணைப்பு மேலாய்வு செய்துள்ளார். இவரது தமிழ்ப் பணிகளைப் பாராட்டிப் பல்வேறு அமைப்புகள் வழங்கிய பட்டங்கள், விருதுகள் பலப்பல! அவற்றுள் சில:

'தமிழ்த் தொண்டர்', 'சிறந்த மொழி பெயர்ப்பாளர்', 'ஆட்சிமொழி அறிஞர்', 'சொல்லாக்கச் செம்மல்', 'முத்தமிழ் முனிவர்', 'இலக்கியக் காவலர்', 'செந்தமிழ்ச் சான்றோர்', 'திருவள்ளுவர் சீர் பரவுவார்', 'ஆட்சி மொழிக்கு அடிப்படை அமைத்த சாதனையாளர்', 'முத்தமிழ்ச் செல்வர்', 'திருக்குறள் பண்பாட்டுச் சிற்பி', 'கி. ஆ. பெ. விசுவநாதன் விருது'.

மறைமலை அடிகளாரின் வழி நின்று தனித்தமிழைப் போற்றி வளர்த்தல், வான்புகழ் வள்ளுவரின் கருத்துகளை உலகெலாம் பரப்புதல், ஆட்சி மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கப் பணிகள் புரிதல், பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றிப் பாதுகாத்தல், புதிய தமிழ்த் துறைகளை வரவேற்று வளப்படுத்துதல் ஆகியவை இவருடைய உயிர்க் கொள்கைகளாம்.